Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 பிரமோதூத ஆடு வைகாசி மீ 27ஆம் உ ஞாயிற்றுக்கிழமை (10 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 16 ஓசை 112

## யூகோஸ்லாவியாவிலிருந்து 16 இலங்கையர் நாடு கடத்தப் பட்டனர்

(கொழும்பு)

யூகோஸ்லாவியாவிலிருந்து பதினாறு இலங்கையர்கள் நாடுகடத்தப்பட்டு நேற்றுக் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்தடைந்தனர். இவர்கள் இப்பொழுது குற்றப்புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். யூகோஸ்லாவியாவுக்குள் சட்டவிரோதமாகப் புகுந்ததாக இவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இவர்களது பயணம் சம்பந்தமாகப் பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதாகப் பொலிசார் கருதுகின்றனர்.

யூகோஸ்லாவியா செல்வதற்கு விசா தேவையில்லாததால் இப்பொழுது இலங்கையர்கள் இத்தாலிக்குள் சட்டவிரோதமாகக் கடத்தப்படுகின்றனர்.

# மோதலை தடுக்க ஹமீத் வருகிறார்!

## வவுனியாச் சம்பவம் பிரேமா அவசர பணிப்பு!

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து ஜனாதிபதி பிரேமதாஸாவின் அவசரப்பணிப்பின் பேரில் நீதிஅமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

வவுனியாச் சம்பவம் போன்று மீண்டும் எங்கும் ஏற்படாமல் தடுப்பதற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் தொடர்ந்து நல்லுறவு நிலைப்பதற்கும் தமிழீழத்தில் சமாதானம் நீடிக்கவும் நீதி அமைச்சர் ஹமீத் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

அமைச்சர் ஹமீத்துடன் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) திரு யோகரெத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைப் பலாலியில் சந்தித்துப் பேசுவார்.

## கிளிநொச்சி இராணுவ முகாம் வாபஸ் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் இருந்து வரும் ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் ஆனையிறவு முகாமுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இம்மாத முடிவிற்குள் கிளிநொச்சி முகாமிலிருந்து வரும் முழு இராணுவத்தினரும் முற்றுமுழுதாக வெளியேறவுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தலைமையில் 3 வாகனங்களில் மேற்படி முகாமிலிருந்து ஆனையிறவு முகாமுக்குச் சென்றனர்.

## அதிகாரப் பரவலாக்கல் மூலம் உ. அ. அதி. கூடுதல் அதிகாரம்

(மட்டக்களப்பு)

மாகாண சபையின் புதிய அதிகார பரவலாக்கத்தின் கீழ் உதவி அரச அதிபர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளது.

அரச அதிபர் என இருவர் கடமையாற்றவிருக்கிறார்கள்

பிரதேச சபைகளுக்கு இதன் மூலம் அதிகார பரவலாக்கம் செய்யப்படுகிறது. இச்சபையின் செயலாளராக உதவி

## சட்ட விரோத மின்பாவனையில்

## நெடுமாறன் கைது

(தமிழ்நாடு)

தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன் நேற்று தஞ்சாவூரில் கைது. செய்யப்பட்டார்.

இவர் நேற்றும் இன்றும் தஞ்சாவூரில் தமிழ் தேசிய சுயநிர்ணய பிரகடன மாநாட்டை நடத்த இருந்தார். ஆனால் மாநில அரசு இம்மாநாட்டிற்கு அனுமதி தர மறுத்து விட்டது. ஆனால் நெடுமாறன் இதையும் மீறி நேற்றுக்காலை தன்னுடைய நூாற்றுக்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் கோசங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலம் சென்றபோது வழியில் அவரையும் அவரது ஆதரவாளர்களையும் பொலிசார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

## காணி பகிர்ந்தளிப்பு

(நிந்தவூர்)

நிந்தவூர் பற்று உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள 4.2 ஹெக்டர் அரச காணித்துண்டுகள் காணி இல்லாதகுடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

நிந்தவூர்ப் பகுதியைச் சேர்ந்த 42 குடும்பங்களுக்கு (தமிழ், முஸ்லிம்) இக்காணித் துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். பரவட்டைப்புட்டி என்னுமிடத்திலுள்ள காணியே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (53)

## இனஒற்றுமைக்கு நான் எடுக்கும் முயற்சிகளுக்கு சிலர் எதிர்ப்பு

- பிரேமதாஸ

(கொழும்பு)

நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் எடுத்துவரும் முயற்சிகளுக்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

# புலிகளிடம் ஆயுதம் இருப்பது நியாயம்

## தமிழ் நாட்டில் தொண்டமான்

(சென்னை)

தலைமறைவாக இயங்கிவரும் இயக்கங்கள் ஆயுதங்கள் வைத்திருக்கின்றன. இதனால் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஒப்படைக்கத் தயங்கலாம்: எனவே ஆயுதம் தொடர்பான முடிவை எடுக்கும் பொறுப்பை புலிகளிடமே விட்டுவிடவேண்டும் என தமிழ்நாட்டில் பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார்,

மேலும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அத்தேர்தலில் பங்குபற்றாது எனவும் திரு. தொண்டமான் தெரிவித்தார் மேலும் அவர் குறிப்பிடுகையில் வடக்கு-கிழக்கு மாகாண சபை தற்பொழுது செயலிழந்துள்ள தென்றும், ஆகவே அதற்கு உயிரூட்டவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதனால் வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை முடிவெடுத்துள்ளதென்றும் தெரிவித்தார்

## ஓய்வூதியப் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன

### பெஸ்ரஸ்பெரேரா

(கொழும்பு)

ஓய்வூதிய திணைக்களப் பணிகள் பன் முகப்படுத்தப் பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

எந்தப் பகுதிகளில் ஓய்வூதியம் பெறுகிறார்களோ அந்தந்தப் பகுதி மாவட்ட அலுவலகங்களில் இருந்து கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு இது வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் திணைக்களங்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்களின் சிபார்சின்பேரில் ஓய்வூதிய தொகையை கணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாக்கு நீரிணையில்

போன்று மீண்டும் எங்கும் ஏற்படாமல் தடுப்பதற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் தொடர்ந்து நல்லுறவு நிலைப்பதற்கும் தமிழீழத்தில் சமாதானம் நீடிக்கவும் நீதி அமைச்சர் ஹமீத் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

அமைச்சர் ஹமீத்துடன் (மாத்தயா) திரு யோகரெத்தினம் யோகி, அரசியல் ... சிங்கம் ஆகியோரைப் பலாலியில் சந்தித்துப் பேசுவார்.

# கிளிநொச்சி இராணுவ முகாம் வாபஸ் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் இருந்து வரும் ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் ஆனையிறவு முகாமுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இம்மாத முடிவிற்குள் கிளிநொச்சி முகாமிலிருந்து வரும் முழு இராணுவத்தினரும் முற்றுமுழுதாக வெளியேறவுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தலைமையில் 3 வாகனங்களில் மேற்படி முகாமிலிருந்து ஆனையிறவு முகாமுக்குச் சென்றனர்.

பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

நிந்தவூர்ப் பகுதியைச் சேர்ந்த 42 குடும்பங்களுக்கு (தமிழ், முஸ்லிம்) இக்காணித் துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர்அறிவித்துள்ளார். பரவட்டைப்புட்டி என்னுமிடத்திலுள்ள காணியே இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (53)

ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அத்தேர்தலில் பங்குபற்றாது எனவும் திரு. தொண்டமான் தெரிவித்தார்

மேலும் அவர் குறிப்பிடுகையில் வடக்கு-கிழக்கு மாகாண சபை தற்பொழுது செயலிழந்துள்ள தென்றும், ஆகவே அதற்கு உயிரூட்டவேண்டும்

# அதிகாரப் பரவலாக்கல் மூலம் உ. அ. அதி. கூடுதல் அதிகாரம்

(மட்டக்களப்பு)

மாகாண சபையின் புதிய அதிகார பரவலாக்கத்தின் கீழ் உதவி அரச அதிபர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் உதவி அரச அதிபர் பிரிவுகளில் இனிமேல் சிரேஷ்ட உதவி அரச அதிபர், கனிஷ்ட உதவி அரச அதிபர் என இருவர் கடமையாற்றவிருக்கிறார்கள்

பிரதேச சபைகளுக்கு இதன் மூலம் அதிகார பரவலாக்கம் செய்யப்படுகிறது. இச்சபையின் செயலாளராக உதவி அரச அதிபர் பணியுரிவார்.

ஒவ்வொரு பிரிவிலும் தொழில் நுட்ப அலுவலகர்கள்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்கா இராணுவம் மதவாச்சியில் இறக்கப்பட்டது

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் கடமையாற்றுவதற்காக புகையிரதத்தில்யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணத்தை மேற்கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் வியாழனன்று மதவாச்சியில் வைத்து இறக்கப் பட்டனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்கள் இறக்கப்படுவதாக உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனுராதபுர புகையிரத நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் செய்யப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்தே இராணுவத்தினர் மதவாச்சி புகையிரத நிலையத்தில் இறக்கப் பட்டு, மதவாச்சியில் அமைந்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரசதுறையில் 5000 பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் 5000க்கும் மேற்பட்ட பதவிகள் காலியாக உள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சு அண்மையில் நடத்திய கணிப்பீட்டிலிருந்து இது தெரியவந்துள்ளது.

மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர், எழுதுவினைஞர் முதலான பல்வேறு பதவிகளுக்கே வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த மூன்றுவருட காலத்திற்குள் சுமார் பதினான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசாங்க சேவையிலுள்ளோர் ஓய்வு பெற்றுள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோத மின்பாவனையில் 139 மில்லியன் நட்டம்

(வல்வெட்டித்துறை)

சட்டவிரோத மின்பாவனையால் யாழ். மாவட்டத்திற்கு 139 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்கிறார் யாழ். உள்ளூராட்சி ஆணையாளர்திரு. எஸ்.டிவகலாலா.

சட்ட விரோத மின்பாவனையால் இலங்கை மின்சார சபைக்கு யாழ். மாவட்ட பிரதேச சபைகள் 1983 தொடக்கம் 1990 வரையில் 139 மில்லியனைக் கட்ட வேண்டியுள்ளது. மேற்படி பணத்தினை நாம் எப்படிச் செலுத்தமுடியும்? தவறான வழிகளில் பயன்படுத்திவரும் மேற்படி பாவனையாளர்களைக் கட்டுப்படுத்துவது, தடை செய்வது போன்ற நடவடிக்கையின் மூலமாகவே

(6ஆம் பக்கம் பார்க்க)

# போலி ஏஜென்சி நிலையம் போலிஸாரால் சீல் வைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றி வந்த போலியான ஏஜென்சி ஒன்றை பொலிசார் மூடியதுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக நேற்று முன்தினம் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாட்டுச் சரக்குக் கப்பல்களில் வேலை பெற்றுத் தருவதாக போலி ஆவணங்களையும் கப்பலில் தொழில் வெற்றிடங்கள் பல கைவசம் இருப்பதாகக் காட்டும் பொய்யான பட்டியலும் இவர்கள் வசமிருக்கக்கண்டுபிடிக்கப்பட்டது. கப்பலில் வேலைகேட்டு வருபவர்களிடம் தலா 1,50,000 இந்தப்போலி ஏஜென்சி பெற்றுள்ளது.

கட்டுநாயக்காவில் இருந்து விமான மார்க்கமாக இத்தாலி போக இருந்த இளைஞரைச்சுங்கப் பகுதியினர் தடுத்து வைத்து விசாரித்த சமயம் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிசார் மேற்படி ஏஜென்சியை மூடி முகாமையாளரைக் கைது செய்தனர்.

# இனஒற்றுமைக்கு நான் எடுக்கும் முயற்சிகளுக்கு சிலர் எதிர்ப்பு

- பிரேமதாஸ

(கொழும்பு)

நாட்டில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் எடுத்துவரும் முயற்சிகளுக்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ பொல்லநறுவ மாவட்ட மக்கள் பிரதிநிகள் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாட்டில் நேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி சமாதான முயற்சிகள் தோல்வியடைந்து மீண்டும் கலவரங்கள் தலை தூக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றனர். இன்னும் சிலர் எதிர்கால சந்ததியின

(6ஆம் பக்கம் பார்க்க)

## பல இலட்சம் செலவில் ஸ்ரேடியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி றொட்டிக் கோ விளையாட்டு மைதானத்தில் பல இலட்சம் ரூபா செலவில் ஸ்ரேடியம் ஒன்று அமைப்பதற்கான முயற்சியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க.மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இது சம்பந்தமாக கட்டிடக் கலைஞர் ஒருவரால் படம் வரையும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (49)

# ஓய்வூதியப் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன

பெஸ்ரஸ்பெரேரா

(கொழும்பு)

ஓய்வூதிய திணைக்களப் பணிகள் பன் முகப்படுத்தப் பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

எந்தப் பகுதிகளில் ஓய்வூதியம் பெறுகிறார்களோ அந்தந்தப் பகுதி மாவட்ட அலுவலகங்களில் இருந்து கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு இது வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் திணைக்களங்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்களின் சிபார்சின்பேரில் ஓய்வூதிய தொகையை கணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாக்கு நீரிணையில் ஸ்ரீலங்கா கடற்படை ரோந்து

(வல்[illegible]ட்டித்துறை)

வடமர[illegible]ாக்கு நீரிணைப்பகுதியில [illegible]ங்கா கடற்படைக்கப்பல்கள் [illegible]ிர ரோந்து.

அண்மையில் சில நாட்களாக மேற்படி கடற்பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்கள் இரவு பகலாக தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

மேற்படி கப்பல்களின் ரோந்தினால் மீனவர்கள் மீன்கள் பிடிக்காமல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வாழைப்பாடி பிதற்றல்

# நக்சலைட்டிற்கு புலிகளின் ஆயுத வினியோகம்

(சென்னை)

இலங்கையிலிருந்து இராமநாதபுரம்வழியாக விடுதலைப் புலிகளால் கடத்தப்படும் நவீன ஆயுதங்கள் ஆந்திர மாநிலத்திலுள்ள நக்சலைட்டுகளுக்கும், சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனுக்கும் போய்ச் சேருவதாக தமிழ் நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# யப்பானில் வேலை தருவதாக 1 கோடி ரூபா மோசடி!

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு கோடி ரூபா பணத்தைச் சுருட்டிக்கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் தலைமறைவாக வாழும் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த கணவ

(6ஆம் பக்கம் பார்க்க)

# ‘சுயநல, சந்தர்ப்பவாத அரசியலால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது’

## தொழிலாளர் விவசாயவிடுதலைமுன்னணிச் செயலாளர்

(தலவாக்கொல)

முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட நாடுகளில் வேலையில்லாப் பிரச்சினையானது விஸ்வரூபமெடுத்துள்ளது. இதனால் இன ஒதுக்கல்களும், சுரண்டல் வாதமும் நீடிக்கின்றன.மலையகத்திலும் இந்நிலை நிலவுகின்றது.

இவ்வாறு தொழிலாளர் விவசாய விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் திரு. வி. எல். பெரேரா தலவாக்கொல நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

பிரசாரச் செயலாளர்திரு. சி. எஸ். காந்தி இதற்கு தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய திரு. பெரேரா சுயநலப் போக்குடைய சந்தர்ப்பவாத அரசியல்கோட்பாடுகளினாலும்நடவடிக்கைகளினாலும் எமது பாரிய பிரச்சினைகளுக்குநிரந்தர பரிகாரம் காண முடியாது. அதேபோல சந்தர்ப்பவாத தொழிற்சங்கங்களா

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொழிலாளருக்கு வீடமைக்க சுவீடன் உதவி

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில் அரசாங்க தோட்டங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக சுவீடன் நிதி உதவியில் இருந்து 63 லட்சத்து 12 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

காணி வசதி, வீடு வசதியற்ற வருமானம் குறைந்த குடும்பங்களுக்கே வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப் படவிருக்கின்றன.

## வடக்கு - கிழக்கு

# மாகாணசபைகளின் அதிகாரங்கள் எவையும் அதிகரிக்கப்படவில்லை

- கணேசநாதன்

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்குரிய அதிகார பரவலாக்கல் அன்று காணப்பட்ட நிலையில்தான் இன்றும் உள்ளது. ஆளுநரின்கீழ் சபையின் நிர்வாகம் இருந்தும் நிர்வாகத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் திரு.எஸ். கணேசநாதன் மட்டக்களப்பில் செய்தியாளரிடம் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்கஅதிபர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அவர் இங்கு வந்திருந்தார். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வருவோரே இந்த மாற்றங்களைச் செய்ய வேண்டும். புனரமைப்பு, புனர்வாழ்வு வேலைகளைத் துரிதப்படுத்த அன்றைய காலநிலை எமக்கு சாதகமாக இருக்கவில்லை. ஆனால் இன்றைய சூழ்நிலை அதற்கு சாதகமாக இருப்பதால் துரிதமாக நடைபெறுகிறது என்றார்.

புதிய மாகாண அரசு பதவி

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

# புதிய மின் கட்டணங்கள்

1990 - 04 - 01 ஆம் திகதி தொடக்கம் எரிபொருள் மின்சக்தி அமைச்சின் பிரதம மின் பரிசோதகரின் பணிப்பின் பிரகாரம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றப் பிரதேசத்தில் புதிய விகிதப்படி மின் கட்டணங்கள் அறவிடப்படுமென மின் நுகர்வோருக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. எனவே இந்த மின் கட்டண அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு மின் பாவனையாளர்கள் தங்கள் மின்நுகர்ச்சியைவீண் விரயம் செய்யாதுகட்டுப்பாட்டுடனும்,அளவாகவும் உபயோகித்துப் பண விரயத்தை இயன்றளவு குறைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்: 28-05-1990

### பிரிவு 1 வதிவிடங்களுக்குரிய இறுப்பு

1. தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப் பாவனைக்காக பாவிப்பவர்களுக்குப் பொருந்தும்.
2. இந்த இறுப்பின் பிரகாரம் மின் விநியோகத்துக்கான மாதாந்தக் கட்டணம் வருமாறு:-
   1 - 10 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு – 75 சதப்படியும்,
   (எரிபொருட் சீராக்கல் கட்டணம் நீங்கலாக)
   10க்கு மேல் - 50 வரை அலகுகளுக்கும், அலகொன்றுக்கு ரூபா 1-25 சதவீதமும்
   (எரிபொருட் சீராக்கல் கட்டணம் நீங்கலாக)
   50க்கு மேல் - 100 வரை அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 2/- வீதமும்,
   (8ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு எரிபொருட் சீராக்கல் கட்டணமும்)
   100க்கு மேல் - 450 வரை அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 3/- வீதமும்,
   (8ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு எரிபொருட் சீராக்கல் கட்டணமும்)
   450க்கு மேற்பட்ட அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 4/- வீதமும்)
   (8ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு எரிபொருட் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும்)
   அத்துடன்,
   மாதாந்த நிலையான கட்டணம்
   1 -- 10 அலகுகள் பாவிப்போருக்கு ரூபா 5/.
   11க்கும் அதற்கு மேற்பட்ட அலகுகள் பாவிப்போருக்கு ரூபா 10/-

### பிரிவு 2 - சமய சம்பந்தமான இடங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத் தலங்கள், இத் தலங்களுள் அல்லது அதனோடு சேர்ந்துள்ள மதகுருமாரின் வசிப்பிடங்கள், சமூக சேவைப் பணிப்பாளரால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், முதியோர் அனாதை மடங்கள், வலது குறைந்தோர் அங்கவீனர் விடுதிகள் போன்றவற்றிற்கான இறுப்பாகும்.

(பிரதானமாக அல்லது முழுமையாக வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் ஸ்தாபனங்கள் இதிலடங்க மாட்டா)

2. மாதாந்தக் கட்டணம்-
   நிலையான கட்டணம் -- ரூபா 10/-ம்,
   1—150 அலகுகளுக்கு, அலகொன்றிற்கு -/90 சதவீதமும்,
   (எரிபொருட் சீராக்கற் கட்டணம் நீங்கலாக)
   150 மேற்பட்ட அலகுகளுக்கு அலகொன்றுக்குரூபா 3/-ம்,
   (எரிபொருட் சீராக்கற் கட்டணம் அறவிடப்படும்)

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றிற்கு 01-03-1985 தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச் சலுகையைப் பெற்றுவந்தவர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் மாதாந்தச் சராசரி நுகர்ச்சியின் அலகுகளின் அடிப்படையில் அலகொன்றுக்கு

கைத்தொழில் வீதம் - 2

1. மதிப்பிட்ட தேவை ''50 கிலோவோல்ற் அம்பியேசுக்கு'' (வோல்ற்ஸ் அளவு 400/230)க்கு சமமாக அல்லது மேற்படும் வழங்கல்களுக்கு.
2. கீழ் வரும் (அ) (ஆ) (இ) குறித்துள்ள மாதக் கட்டணங்கள் அறவிடப்படும்.
   (அ) நுகரப்படும் அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 3/-ம், எரிபொருள் சீராக்கல் கட்டணமும் மாதத்தில் பயன்படுத்திய
   (ஆ) உச்சத் தேவைகளுக்கு கே. வி. ஏக்கு ரூபா 175/- வீதமும்
   (இ) நிலையான கட்டணம் ரூபா 300/-

### பிரிவு - 6 ஹோட்டல் இறுப்பு

ஹோட்டல் வீதம் 1

ஹோட்டல்கள் உணவுச் சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும்.

1. மதிப்பிட்ட தேவை 50 கே. வி. ஏ. (வோல்ற்ஸ் அளவு 400/230)க்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்
2. கீழ்வரும் (அ) (ஆ) குறித்துள்ள மாதாந்தக் கட்டணங்கள் அறவிடப்படும்.
   (அ) நுகரப்படும் அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்,
   (ஆ) மாதாந்த நிலையான கட்டணம்-
   10'' கே. வி. ஏ.''க்கு - ரூபா 50/-
   ''கே. வி. ஏ.'' 10க்கும் - 50க்கும் ரூபா 200/-

ஹோட்டல் வீதம் 2

1. மதிப்பிட்ட தேவை 50 கே. வி. ஏ.க்கும் (வோல்ற்ஸ் அளவு 400/230)க்கும் அதற்கும் மேற்பட்ட வழங்கல்களுக்கும் பொருந்தும்.
2, கீழ்வரும் (அ) (ஆ) (இ)வில் குறிப்பிட்ட மாதாந்தக் கட்டணங்கள் அறவிடப்படும்
   (அ) நுகரப்படும் அலகுகளுக்கு, அலகொன்றுக்கு 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்,
   (ஆ) மாதத்தில் பயன்படும் உச்சத்தேவைகளுக்கு கே.வி. ஏ.க்கு ரூபா 175/– வீதமும்
   (இ) நிலையான கட்டணமாக ரூபா 300/-ம்

### பிரிவு 7 தற்காலிக மின்விநியோகம்

அலகு ஒன்றுக்கு ரூபா 3/50 ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும், பொருட்களினதும் மானியினதும் வாடகையாக பெறுமதியின் 10% வீதமும், கூலிகளும் மேற்பார்வைக் கட்டணமும் நுகர்ச்சியாக ஒரு வைப்புப்பணமும் அறவிடப்படும்.

கேளிக்கைகள் போன்ற இடங்கட்கு மேலதிக தேவைக் கட்டணமாக கே. வி. ஏக்கு ரூபா 100/- வீதம் அறவிடப்படும்.

தற்காலிக மின் விநியோகம் கூடுதலாக 2 வார காலத்திற்கு வழங்கப்படலாம் அதற்கு மேல் விஸ்தரிக்கலாகாது.

### பிரிவு 8 எரிபொருள் சீராக்கல் கட்டணம்

மின் உற்பத்திக்கு பெற்றோலியம், எரிபொருள், அல்லது நிலக்கரி அல்லது பெற்றோலியம் காஸ் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் உத்தேச செலவுக்கு ஈடுசெய்யும் வகையில் பாவனையாளரிடமிருந்து எரிபொருள் சீராக்கல் கட்டணமாக நுகரப்படும் மின் அலகுகளுக்கு அறவிடப்படும். ஆயினும் சில கட்டங்களில் விசேடமாக தவிர்ப்புச் சலுகை வழங்கப்படும். விசேடமாக தவிர்க்கப்பட்டாலன்றி சராசரி எரி பொருள் சீராக்கல் கட்டணம் மாதாந்தம் நுகரப்படும் அலகுகளின் அடிப்படையில் தரப்பட்ட கட்டணங்களுடன் சேர்த்து அறவிடப்படும்.

மதிப்பிட்ட பொருத்தமான எரிபொருட் சீராக்கல் கட்டணம் இலங்கை மின்சார சபையால் காலத்துக்குக் காலம் பிரகடனப்படுத்தப்படும்.

1990 ஆம் ஆண்டு எரிபொருட் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

### தெளிவுபடுத்தலும் வரைவிலக்கணமும்

1. வழமையாக 30 நாட்கள் இடைவெளிவிட்டு எடுக்கப்படும் மானி வாசிப்பின் அடிப்படையிலேயே மாதாந்தக் கட்டணமும், எரிபொருள் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும். அவ்வாறு மின் வாசிப்பு எடுக்கப்படாவிடில் உத்தரவு பெற்றவர் நுகர்ச்சியை மதிப்பிட்டு அதனடிப்படையில் மாதாந்தக் கட்டணமும், எரிபொருள் சீராக்கல் கட்டணமும் கணக்கிடப்படும்.
2. பாவனையாளருக்கு மின்சாரம் வழங்கிய திகதி வழமையான மின்வாசிப்பு திகதிக்கு வேறுபட்டதாகவிருப்பின் அலகுக்கான நுகர்வுக் கட்டணம் முன்னையதைப் போலவும் மற்றும் உச்சத் தேவைக் கட்டணமும் விகிதாசார அடிப்படையில் பாவித்த காலத்தைப் பொறுத்ததாகும்.
3. ஒரு மாதத்தில் கே. வி. ஏ. யில் உச்சத் தேவை பின்வரும் கருவியைப் பொறுத்தது.
   (அ) மின் கடத்தி விகிதாசாரத்தால் பெருக்கி பிரகடனத்தப்படும் உச்சத் தொகை அம்பியரைப் பொறுத்ததாகும்.
   அல்லது


**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10:30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45,
7-00, 9-30
STUART STEEN PEDRO
HUGHES BENARD
GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-30, 7-00, 9–30
சனி, ஞாயிறு, விடுமுறை
நாட்களில்
10–30, 2-30, 6-30, 9-30
**'ALIENS'**
Packed with
Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A. V .M இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

06. 06. 90

1 -- 10 அலகுகள் பாவிப்போருக்கு ரூபா 5/.
11க்கும் அதற்கு மேற்பட்ட அலகுகள் பாவிப்போருக்கு ரூபா 10/-

### பிரிவு 2 - சமய சம்பந்தமான இடங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத் தலங்கள், இத் தலங்களுள் அல்லது அதனோடு சேர்ந்துள்ள மதகுருமாரின் வசிப்பிடங்கள், சமூக சேவைப் பணிப்பாளரால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், முதியோர் அனாதை மடங்கள், வலது குறைந்தோர் அங்கவீனர் விடுதிகள் போன்றவற்றிற்கான இறுப்பாகும்.

(பிரதானமாக அல்லது முழுமையாக வர்த்தக நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் ஸ்தாபனங்கள் இதிலடங்க மாட்டா)

2. மாதாந்தக் கட்டணம்-
நிலையான கட்டணம் -- ரூபா 10/-ம்,
1—150 அலகுகளுக்கு, அலகொன்றிற்கு -/90 சதவீதமும்,
(எரிபொருட் சீராக்கற் கட்டணம் நீங்கலாக)
150 மேற்பட்ட அலகுகளுக்கு அலகொன்றுக்குரூபா 3/-ம்,
(எரிபொருட் சீராக்கற் கட்டணம் அறவிடப்படும்)

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றிற்கு 01-03-1985 தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச் சலுகையைப் பெற்றுவந்தவர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் மாதாந்தச் சராசரி நுகர்ச்சியின் அலகுகளின் அடிப்படையில் அலகொன்றுக்கு -90/ சதமும், (எரிபொருட் சீராக்கல் கட்டணம் நீங்கலாக) இச்சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 3/-ம் அதற்[illegible]ான எரிபொருட் சீராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்.

### பிரிவு 3- வீதிவெளிச்ச [illegible]

1. பகிரங்க வீதிகளுக்கு ஒளியூ[illegible]லுக்கு இக் கட்டணம் ஏற்புடையதாகும்.
2. மாதாந்தக் கட்டணம் [illegible]கரப்படும் அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/80 வீதமும் அதற்குரிய எரிபொருட் சீராக்கல் கட்டணமும்.

(இச் செலவு மாநகரசபையால் ஈடு செய்யப்படும்)

### பிரிவு 4- பொதுநோக்கங்களுக்கான இறுப்பு

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள், பண்டகசாலைகள், பொதுக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுதுபோக்கு களியாட்ட இடங்கள், மற்றும் இவைபோன்ற ஏனைய இடங்களுக்கும் பொருந்தும்.

பொது நோக்கங்களுக்கான வீதம் 1

மதிப்பிட்ட தேவை 50 கில்லோ வோல்ற் அம்பியேசுக்கு (வோல்ற்ஸ் அளவு 400/230) க்கு குறைந்தாகவிருக்குமிடத்து-

(அ) நுகரப்படும் அலகுகளுக்கு அலகொன்றுக்கு ரூபா 3/50ம்,
(எரிபொருட் சீராக்கக் கட்டணமும்)

(ஆ) கீழ்வரும் வீதப்படி மாதாந்த நிலையான கட்டணமும், 10'' கில்லோ வோல்ற் அம்பியேஸ்'' வரைக்கான ஒப்பந்த தேவைக்கு ரூபா 50/- 10-50'' கில்லோ வோல்ற் அம்பியேஸ்'' வரைக்கான ஒப்பந்தத் தேவைக்கு ரூபா 200/-

பொது நோக்கங்களுக்கான வீதம் 2

1. மதிப்பிட்ட தேவை 50 ''கில்லோ வோல்ற்'' அம்பியேசுக்கு (வோற்ஸ் அளவு 400/230)க்கு சமனாக அல்லது மேற்பட்டதாக இருக்குமிடத்து-
2. கீழ்க்கண்டவாறு (அ) (ஆ) (இ) வில் குறிப்பிட்ட மாதக்கட்டணம்-
   (அ) நுகரப்படும் அலகுகளுக்கு அலகொன்றுக்கு ரூபா 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்,
   (ஆ) உச்சத் தேவைக் கட்டணம் 'கிலோ வோல்ற்ஸ்'' அம்பியேஸ்'' ஒவ்வொன்றிற்கும் ரூபா 175/- வீதம் அ்ம்மாதத்தில் செய்யப்பட்ட உச்சத் தேவைகளுக்கு
   (இ) நிலையான கட்டணம் ரூபா 300/-

### பிரிவு - 5 கைத்தொழில் இறுப்பு

உந்துவலுவுக்கு அல்லது தொழிற்சாலைகள்' வேலைத்தளங்கள், எண்ணெய் ஆலைகள், தும்புஆலைகள்நூற்றல்மற்றும் நெசவு ஆலைகள், இறைக்கும் இயந்திர நிலையங்கள், மற்றும் இதனை ஒத்த ஏனைய கைத்தொழில் அமைப்புக்களில் ''எலோக்றோ'' இரசாயனப் படிமுறைக்கு முழுமையாக அல்லது பிரதானமாக மின் பயன்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு இந்த இறுப்பு ஏற்புடையதாகும்.

கைத்தொழில் வீதம் 1

1 மதிப்பிட்ட தேவை 50 கில்லோ வோல்ற் அம்பியேசுக்கு(வோல்ற்ஸ் அளவு 400/230)க்கு குறைந்ததான வழங்கல்களுக்கு

2. கீழ்வரும் (அ) (ஆ) குறிப்பிட்ட மாதக்கட்டணங்கள்
   (அ) நுகரப்படும் அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 3.00ம் எரிபொருன் சீராக்கல் கட்டணமும்
   (ஆ) மாதாந்த நிலையான கட்டணம்–
   ஒப்பந்தத்தேவை 10 கே. வி. ஏக்கு மேற்பட்டதாயின் ரூபா 60/- ஒப்பந்தத் தேவை 10 கே.வி.ஏ.–50 கே'வி. ஏக்கு மேற்படாதிருப்பின் ரூபா 150/-

சீராக்கல் கட்டணம் மாதாந்தம் நுகரப்படும் அலகுகளின் அடிப்படையில் [illegible] கட்டணங்களுடன் சேர்த்து அறவிடப்படும்.

மதிப்பிட்ட பொருத்தமான எரிபொருட் சீராக்கல் கட்டணம் இலங்கை மின்சார சபையால் காலத்துக்குக் காலம் பிரகடனப்படுத்தப்படும்.

1990 ஆம் ஆண்டு எரிபொருட் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

### தெளிவுபடுத்தலும் வரைவிலக்கணமும்

1. வழமையாக 30 நாட்கள் இடைவெளிவிட்டு எடுக்கப்படும் மானி வாசிப்பின் அடிப்படையிலேயே மாதாந்தக் கட்டணமும், எரிபொருள் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும். அவ்வாறு மின் வாசிப்பு எடுக்கப்படாவிடில் உத்தரவு பெற்றவர் நுகர்ச்சியை மதிப்பிட்டு அதனடிப்படையில் மாதாந்தக் கட்டணமும், எரிபொருள் சீராக்கல் கட்டணமும் கணக்கிடப்படும்.
2. பாவனையாளருக்கு மின்சாரம் வழங்கிய திகதி வழமையான மின்வாசிப்பு திகதிக்கு வேறுபட்டதாகவிருப்பின் அலகுக்கான நுகர்வுக் கட்டணம் முன்னையதைப் போலவும் மற்றும் உச்சத் தேவைக் கட்டணமும் விகிதாசார அடிப்படையில் பாவித்த காலத்தைப் பொறுத்ததாகும்.
3. ஒரு மாதத்தில் கே. வி. ஏ. யில் உச்சத் தேவை பின்வரும் கருவியைப் பொறுத்தது.
   (அ) மின் கடத்தி விகிதாசாரத்தால் பெருக்கி பிரகடனத்தப்படும் உச்சத் தொகை அம்பியரைப் பொறுத்ததாகும்.
   அல்லது
   (ஆ) ஒரு மாதத்தில் கணிக்கப்படும் உச்சத் தேவை கே. வி. ஏ. யில் அடுத்து வரும் 15 நிமிடங்களில் அறவிடப்படும். எப்போதாவது கணிக்கப்படும் உச்சத்தேவை கே. வி. ஏ. யில் ஒரு முழு இலக்கமாகவில்லையேல், அறவிடப்படும் உச்சத் தேவை கே. வி. ஏ. யில் நேரடுத்துவரும் முழு இலக்கமாகும்.
4. ஒப்பந்தத் திகதியிலிருந்து 12 மாத காலம் முடிவடையுமுன் ஒப்பந்தத் தேவை ஒத்துக் கொள்ளப்பட்ட பெறுமானத்திலிருந்து குறைவடைதலாகாது.
5. மின்வலுவைப் பொறுத்தமட்டில் ஒரு ''அலகு'' என்பது ஒரு'' கிலோ வாற்ஸ் அவர்'' என்பதாகும்.

## நானாவித கட்டணங்கள்

1. அமைப்பு பரிசோதனை

(அ) புதிய அமைப்பு மற்றும் விஸ்தரிப்புகளுக்கான முதற் பரிசோதனை இலவசம்.
(ஆ) முதற் பரிசோதனை திருப்தியளிக்காவிடில் ஒவ்வொரு மேலதிக பரிசோதனைக்கும்.

| | | |
|---|---|---|
| தனி நிலை பூரண அமைப்புக்கு | ரூபா | 100-00 |
| மூன்று நிலை பூரண அமைப்புக்கு | ரூபா | 200–00 |

2, மானிப் பரிசோதனை

நுகர்வோரின் கோரிக்கையின் பேரில் மானியைப் பரிசோதிக்க ரூபா 100/, மானியின் செப்பையின்மை 2 1/2% சத வீதத்தைவிடக் கூடவோ அல்லது குறைவாகவோகாட்டுமே ஆனால் கட்டணம் மீளளிக்கப்படும்.

3. கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான கட்டணம்:

பாவனையாளர் ஒருவரின் மின்சாரக் கணக்குகள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையாகவுள்ள சந்தர்ப்பத்தில் அம்மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக் கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10%சதவீத மேலதிகக் கட்டணமும், துண்டிப்பு நடவடிக்கைக் கட்டணமாக ரூபா 100/-ம் அறவிடப்படும்.

4. ஒழுங்கு விதிகளை மீறுபவர் மீது (உதாரணமாக மானியில் மாற்றம் செய்தல், மானி முத்திரைகளை, கட்அவுட் மூத்திரைகளை சேதப்படுத்துதல், இவை போன்றவை) அவர்களது மின் வழங்கல் துண்டிக்கப்படுவதுடன் ரூபா 2000/- அபராதம் அறவிடப்பட்டு, மானியில் பதியப்படாத மின் பாவனைக்காக கட்டணம் உரிமம் பெற்றவரால் மதிப்பீடு செய்யப்பட்டு அக் கட்டணத்துடன் 25 சதவீத மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும். மதிப்பீட்டு முறையும் காலமும் உரிமம் பெற்றவரின் சுய விருப்பைப் பொறுத்தது.
5. சட்டவிரோத மின் விஸ்தரிப்புகளை வேறு கட்டடங்களுக்கு (மின்மானிமூலம்) கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூபா 300/- அறிவிடப்படும்.
6. பாவனையாளரின் விருப்பத்தின் பேரில் மின் வழங்கல் துண்டிக்கப்பட்டு மீள வழங்கலுக்கு ரூபா 150/- அறவிடப்படும்.
7. மின்வழங்கல் தடைப்படும் போது சேவையின் உருக்கியை மீளப் பொருத்துதற்காக; தனி நிலைக்கு ரூபா 20/- ம்
   மூன்று நிலைக்கு ரூபா 30/ ம் அறவிடப்படும்.
8. 01-01-1988 முதல் செயற்படுத்தப்பட்ட இறுப்பு அட்டவணை இரத்தாகியுள்ளது

(B.1131)

(கலர்)

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன
ரோஜா
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M.G.R, ஜெயலலிதா,
அசோகன், சுந்தரராஜன்,
பண்டரிபாய், சோ
நடித்த
தேடிவந்த
மாப்பிள்ளை
(புதிய பிரதி)

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தினங்கள்
மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

## நெடுந்தீவில் கால்நடை நோய்

நெடுந்தீவு கிழக்கில் கால்நடைகள் பல இனங்காணப்படாத நோய் காரணமாக இறந்ததைத் தொடர்ந்து நெடுந்தீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினர் வேலணை மிருக வைத்தியப் பிரிவினருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

கால் நடைகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் கோமாரியாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. உடன் வைத்திய உதவி வழங்க வேலணை மிருக வைத்தியப் பிரிவினர் நடவடிக்கைமேற்கொண்டுள்ளனர்.

(62)

# A/L பௌதிக இரசாயனம் வெப்ப இரசாயனம்

## தொடர் - 3


**சத்தீஸ்**

**அகவெப்பத் தாக்கங்கள்**

விளைவுகளின் மொத்த உள்ளீட்டுச் சக்தி, தாக்கிகளின் மொத்த உள்ளீட்டுச்சக்தியிலும் உயர்வாக இருக்கும் போது வெப்பம் உள்ளெடுக்கப்படும் தாக்கம் அகவெப்பத்தாக்கத்திற்குரியது எனப்படும்.


**அகவெப்பத் தாக்கங்களின் சக்திப் பாதை வரைபு**

படம் - 3




$H_1$ - தாக்கிகளின் உட்சக்தி
$H_2$ - விளைவுகளின் மொத்த உட்சக்தி
$H_3$ - ஏவற்சக்தி
$H_4$ - பிற்தாக்கத்தின் ஏவற்சக்தி
$H_5$ - இடைநிலையின் சக்தி
$\Delta H$ - தாக்கவெப்பம்

1. தாக்கத்தின் போது ஆக்கப்படும் பிணைப்புக்களின் வலிமையிலும் உடைக்கப்படும் பிணைப்புக்களின் வலிமை உயர்வாக இருப்பின் சக்தி உள்ளெடுக்கப்படும் தாக்கம் அகவெப்பத்தாக்கம் எனப்படும்.
2. அகவெப்பத் தாக்கத்தின் வெப்ப உள்ளுறை




$$\Delta H = H_2 - H_1$$
$$H_2 > H_1$$
$$\therefore \Delta H = (+)$$

இங்கு தொகுதி வெப்பத்தை ஏற்கும்: சூழல் வெப்பத்தையிழக்கும்.

3. அகவெப்பத் தாக்கவிளைவுகள் கூடிய சக்திநிலையில் இருப்பதால் உறுதி குறைந்தவை, தாக்கத்திறன் கூடியவை.

**குறிப்பு:**

அகவெப்பத் தாக்க விளைவுகள் யாவும் சுயமாகப் பிரிகையடையவேண்டும் என்ற நியதியில்லை. காரணம் இத்தாக்கங்களுக்கும் சக்தித்தடை உண்டு. இவற்றை மீற ஏவற் சக்தி கொடுக்கப்படல் வேண்டும்.

## தாக்கவெப்பத்தின் உபயோகங்கள்

(1) இயக்கச் சமநிலையில் உள்ள ஒரு தாக்கத்தின் உச்ச விளைவு எந்த வெப்பநிலையில் பெறப்படும் என்பதை அறிவதற்கு பயன்படும்.

## நேபாள - இந்திய உறவில் திருப்பம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உறவுகளை மீண்டும் வலுப்படுத்த இரு நாடுகளும் நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

நேற்று முன்தினம் இங்கு வந்த நேபாளப் பிரதமர் பட்டராய் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை இந்திய தலைவர்களுடன் ஆரம்பித்துள்ளார். மூன்று நாட்கள் அவர் இங்கு தங்கியிருப்பார்.

சீனாவிடம் நேபாளம் ஆயுதங்களை வாங்கியதையடுத்து கடந்த பதினான்கு மாதங்களாக இந்தியாவுக்கும் நேபாளத்துக்குமிடையிலான வர்த்தக உறவு சீரற்றுப்போனது.

# நீர்மூழ்கி கப்பல் வாங்கியதில் 67 கோடி ரூபா ஊழல்

## வங்கிக்கணக்கை நிறுத்துமாறு சுவிஸிடம் கோரிக்கை

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போது இந்தியா சுவிஸ்ஸில் இருந்து வாங்கிய நீர்மூழ்கிக் கப்பல் பேரத்தில்சுமார் அறுபத்தேழு கோடி ரூபா ஊழல் நடந்திருப்பதாக இந்திய மத்திய புலனாய்வு துறையினர் தெரிவித்துள்ளனர்.

நானூற்றி அறுபத்தைந்து கோடி ரூபா பெறுமதியான இந்தக் கப்பல்பேரத்தின் இந்த ஊழல் விவகாரங்களைப்பற்றி அறிய முப்பதுக்கும் மேற்பட்ட சுவிஸ் வங்கிக் கணக்கு அதில் போடப்பட்ட சொத்துக்களையும்காசையும்முடக்கி வைக்குமாறு சுவிஸ் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது!

இது தொடர்பான கடிதம் ஒன்றை மத்திய புலனாய்வுத் துறையினர் சுவிஸ் அதிகாரிக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

இதில் சம்பந்தப் பட்ட சில அதிகாரிகளின் பெயர்களும் சுவிஸ் அரசுக்கு புலனாய்வுத் துறையால் அனுப்பப் பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த ஊழல்கள் தொடர்பாக இந்திய அரசு சுவிஸ் அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

# முன்னாள் ஜனாதிபதியின்மகன் எகிப்தில் சரணடைந்தார்

(கெய்ரோ)

இஸ்ரேலிய அதிகாரிகளின் கொலைகளோடு தொடர்புபடுத்தப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்ட எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி கமால் அப்துல் நஸாரின் மூத்த மகன் நேற்று முன்தினம் கெய்ரோ விமான நிலையத்தில் சரணடைந்தார்.

''நான் நிரபராதி என்பதை எகிப்திய மக்களுக்கு நிருபிக்க இங்கு வந்துள்ளேன்'' என்று விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு காலித் அப்துல் நஸார் சொன்னதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொறியியலாளரான காலித் (39 வயது) கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவுவாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்.

1984 - 1987 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இஸ்ரேலிய, அமெரிக்க இராஜதந்திரிகளை உப இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும், பலரைக்காயப்படுத்தியதாகவும் கருதப்படும் ஒரு புரட்சிக் குழுவுடன் காலித் தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் மேல் வழக்குத் தாக்கல் செய்யயப்பட்டு, காலித் நீதிமன்றத்தில்ஆஜராகாமல்வழக்கும் விசாரிக்கப்பட்டது.

காலித்தின் தந்தையான நஸார் சோவியத் சார்பான ஒரு சோஷலிசவாதி. 1950 - 1960 ஆம் ஆண்டுகளில் அரபு நாடுகளில் இவரின் செல்வாக்குப் பரவியிருந்தது.

1970 செப்ரெம்பர் 28இல் நஸார் காலமானபோதுஇலட்சக் கணக்கான மக்கள் வீதிகளில் கூடி நின்று கண்ணீர் அஞ்சலி செலுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளை விடுவிக்க தென்னாபிரிக்க அரசு முடிவு

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் சிறையிலுள்ள நாற்பத்தெட்டுகைதிகள்விடுதலை செய்யப்படுவார்கள் என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி டீ. கிளார்க் அறிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கும் தென்னாபிரிக்க அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இதே போல அவசரகாலச் சட்டத்தையும் நீக்கப் போவதாக ஜனாதிபதிகிளார்க்பாராளுமன்றத்தில் கூறினார். ஒரு பகுதியில் இது நீக்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனைஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கண்டித்துள்ளது.

## ஆர்ஜன்டீனா தோல்வி

(மிலான்)

நேற்று முன்தினம் இத்தாலியில் ஆரம்பமான உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதல் கட்டத்தில் தற்போது சாம்பியனாகவுள்ள ஆர்ஜன்டீனா தோல்வி அடைந்தது. காமரோன் ஒரு கோல் போட்டு ஆர்ஜன்டீனாவை வென்றது.

# பாரம்பரிய கலைகளை நாம் பாதுகாக்க வேண்டும்

(பண்டத்தரிப்பு)

வாழ்க்கைஎன்பதுஒருகலை. அதனை வளம்படுத்துவன நுண்கலைகளாகும். இயற்கையோடு இணைந்த இன்பவாழ்வில் திளைத்த தமிழர் தாம் காண்பன எல்லாவற்றிலும் அழகைக்கண்டு ரசிக்க விரும்பினார்கள்.

இவ்வாறு பண்டத்தரிப்புக் கோட்ட.க்கல்வி அதிகாரி திரு. க. மகேசன் பண்டத்தரிப்புக் கோட்டசித்திர ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிச் செயலமர்வின் இரண்டாம் நாள் அமர்வை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. என். எஸ். கந்தசாமி தலைமையில் இது நடைபெற்றது. தொடர்ந்துபேசிய கல்வி அதிகாரி அமெரிக்கா, யப்பான் தேசத்தவர்கள் வெளிநாடுளுக்குச்சென்று கலைவண்ணத்திலான பொருட்களை வாங்குகின்றனர். ஆனால் நம்மவர்கள் பழைய கதவுகளை தளபாடங்களைக் கொத்தி எரிக்கின்றனர்.

... விடாது பாதுகாக்க வேண்டும் என்றார்.

பிரபல ஓவியர் திரு. மார்க் பொருள் பார்த்து வரைதல், வர்ணம் தீட்டுதல் போன்றவற்றிற்கான விளக்கமளித்தார். (12)

## மணல்சேனையில் கிளை அமைப்பு

(அம்பாறை)


அம்பாறை மாவட்டத்திலுள்ள மணல் சேனைக்கிராமத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கிளை, மகளிர்முன்னணிக்கிளைஅமைப்பு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

# புதிய சோனக தெருவில் இலவச சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெருவில் இலவச வைத்திய சிகிச்சை ... தெரு சிற்றூர் அவையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

புதிய சோனக தெருவைச்




$H_2 > H_1$

$\therefore \Delta H = (+)$

இங்கு தொகுதி வெப்பத்தை ஏற்கும்: சூழல் வெப்பத்தையிழக்கும்.

3. அகவெப்பத் தாக்கவிளைவுகள் கூடிய சக்திநிலையில் இருப்பதால் உறுதி குறைந்தவை, தாக்கத்திறன் கூடியவை.

குறிப்பு:

அகவெப்பத் தாக்க விளைவுகள் யாவும் சுயமாகப் பிரிகையடையவேண்டும் என்ற நியதியில்லை. காரணம் இத்தாக்கங்களுக்கும் சக்தித்தடை உண்டு. இவற்றை மீற ஏவற் சக்தி கொடுக்கப்படல் வேண்டும்.

## தாக்கவெப்பத்தின் உபயோகங்கள்

(1) இயக்கச் சமநிலையில் உள்ள ஒரு தாக்கத்தின் உச்ச விளைவு எந்த வெப்பநிலையில் பெறப்படும் என்பதை அறிவதற்கு பயன்படும்.

(2) விளைவுகளின் உறுதி பற்றி எதிர்வு கூறலாம். தாக்கவெப்பம் கூடிய அளவு எதிர்க்கணியமாயின் விளைவு உறுதி கூடியது. நேர்க்கணியமாயின் உறுதி குறைந்தது.

**உதாரணம்: 3**

சுயமாக நிகழாத புறவெப்பத் தாக்கத்திற்கும், சுயமாக நிகழாத அகவெப்பத்தாக்கத்திற்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு என்ன? ஒரு உதாரணத்தையும் குறிப்பிடுக.

விடை:

புறவெப்பத் தாக்கத்தைத் தொடக்கமட்டும் சக்தி தேவைப்படும் தாக்கம் தொடர சக்தி தேவையில்லை. (Mg இன் தகனத்தை தொடக்கமட்டும் சக்தி தேவைப்படும்) அகவெப்பத் தாக்கங்களைத் தொடக்கவும் தாக்கம் தொடரவும் சக்தி தேவைப்படும் ($KNO_3$ வெப்பமாக்க பிரிகை அடையும். வெப்பத்தை நிறுத்த தாக்கமும் நிறுத்தப்படும்)

## நியமத்தோன்றல் வெப்ப உள்ளுறை ($\Delta H^\circ_f$)

நியம நிபந்தனையில் ஒரு மூல் சேர்வை அதன் நியம நிலையில் உள்ள மிகவும் உறுதியான மூலகங்களில் இருந்து ஆக்கப்படும்போது ஏற்படும் வெப்ப உள்ளுறை மாற்றம் நியமத்தோன்றல் வெப்ப உள்ளுறை எனப்படும்.

$$C(gr) + 2H_2(g) \rightarrow CH_4(g) \quad \Delta H^\circ_f = -74 KJ\ mol^{-1}$$

$$C(gr) + 5/2\ H_2(g) + 1/2\ N_2(g) \rightarrow CH_3NH_2(g) \quad \Delta H^\circ_f = -28\ KJ\ mol^{-1}$$

அநேகமான சேர்வைகளின் தோன்றல் வெப்பங்களை (மேல் கூறப்பட்ட உதாரணங்கள் உட்பட) நேரடியாகத் துணியமுடியாது. காரணம் அனேகமான சேர்வைகளை நேரடியாக அவற்றின் மூலகங்களில் இருந்து தயாரிக்க முடியாது. உதாரணமாக $CH_4$ ஐ அவற்றின் மூலகங்களில் இருந்து ஆக்கமுடியாது. அத்துடன் $CH_4$ ஐ அதன் மூலகங்களாகப் பிரிப்பதும் கடினமானது. எனவே இத்தாக்கங்களை ஒரு கலோரிமானியில் நிகழ்த்த முடியாது.

**உதாரணம் 4**

தோன்றல் வெப்பத்தை நேரடியாக

(1) துணியக்கூடிய இரு (வேறுபாடான) தாக்கங்கள்

(2) துணியமுடியாத ஒரு தாக்கத்துக்குச் சமன்பாடுகள் தருக.

விடை

(1) $C(gr) + O_2(g) \rightarrow CO_2(g)\ \Delta H_f$ துணியலாம்

$Na(s) + 1/2\ Cl_2(g) \rightarrow Na^+Cl^-(s)\ \Delta H_f$ துணியலாம்

(2) $C(gr) + 6H_2(g) + 3O_2(g) \rightarrow C_6H_{12}O_6(s)\ \Delta H_f$ துணியமுடியாது காரணம் இத்தொகுப்பை நேரடியாக நிகழ்த்த முடியாது.

### தோன்றல் வெப்பத்தின் உபயோகம்

சேர்வைகளின் உறுதி நிலைகளை அறிவதற்குத் தோன்றல் வெப்பங்கள் பயன்படுத்தப்படும் $\Delta H_f$ கூடிய அளவு எதிர்க்கணியமாயின் உறுதி கூடியது $\Delta H_f$ கூடிய அளவு நேர்க்கணியமாயின் உறுதி குறைந்தது.

(தொடரும்)

# பாரம்பரிய கலைகளை நாம் பாதுகாக்க வேண்டும்

(பண்டத்தரிப்பு)

வாழ்க்கைஎன்பதுஒருகலை. அதனை வளம்படுத்துவன நுண்கலைகளாகும். இயற்கையோடு இணைந்த இன்பவாழ்வில் திளைத்த தமிழர் தாம் காண்பன எல்லாவற்றிலும் அழகைக்கண்டு ரசிக்க விரும்பினார்கள்.

இவ்வாறு பண்டத்தரிப்புக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. மகேசன் பண்டத்தரிப்புக் கோட்டசித்திர ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிச் செயலமர்வின் இரண்டாம் நாள் அமர்வை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. என். எஸ். கந்தசாமி தலைமையில் இது நடைபெற்றது. தொடர்ந்துபேசிய கல்வி அதிகாரி அமெரிக்கா, யப்பான் தேசத்தவர்கள் வெளிநாடுளுக்குச்சென்று கலைவண்ணத்திலான பொருட்களை வாங்குகின்றனர். ஆனால் நம்மவர்கள் பழைய கதவுகளை தளபாடங்களைக் கொத்தி எரிக்கின்றனர்.

நம் முன்னோர் அளித்த கலைச் செல்வங்களை அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்றார்.

பிரபல ஓவியர் திரு. மார்க் பொருள் பார்த்து வரைதல், வர்ணம் தீட்டுதல் போன்றவற்றிற்கான விளக்கமளித்தார். (12)

### மணல்சேனையில் கிளை அமைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மணல் சேனைக்கிராமத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கிளை, மகளிர்முன்னணிக்கிளைஅமைப்பு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்

## பிரதம தபால் அலுவலகத்தில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்திற்கு வரும் பொதுமககளின் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டுப் போகின்றன. நேற்றும்ஒருசைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இந்திய இராணுவம் இருந்தபோது இங்கு இடம்பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து சைக்கிள்கள் உள்ளே கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டு வெளியில் நிறுத்த அனுமதிக்கப்பட்டது.

இந்திய இராணுவம் சென்று பல நாட்களாகியும் இந்த முறை அமுல் செய்யபபடுவதால் இங்கு வரும் பொதுமக்கள் மாக்பெட் கட்டடத்திற்கு வெளியேயும். பிரதான வீதிக்கரையிலும் தமது சைக்கிள்களை நிறுத்த வேண்டியுள்ளது.

இதனை அவதானித்து ஒரு குழுவினர் சைக்கிளை விட்டு உள்ளே செல்பவர்கள் திரும்பி வருவதற்குள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

தபால் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களின் சைக்கிள்களை உள்ளே நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுத்தால் இனிமேலும் இவ்வாறான திருட்டுக்கள் இடம் பெறாது என பொதுமக்கள் கேட்கின்றனர்.

### ''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்''

இர. சந்திரசேகரின் ''விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்'' அறிமுகவிழா இன்று பிற்பகல் நான்கு மணிக்கு கொழும்பு அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் நடைபெறும்.

தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் இவ் அறிமுக விழாவின் புத்தக வெளியீட்டினை மேமன் கவியும், ஆய்வுரைகளை செல்வி சற்சொரூபவதி நாதன், திக்குவல்லை கமாலும் நடத்துவர்.

### 18 அகதிகளுக்கு தமிழ்நாடு தஞ்சம்

(சென்னை)

பிரான்சில் இருந்து கடந்த மாதம் 31ம் திகதி திருப்பி அனுப்பப்பட்டு கல்கத்தா வந்து இறங்கிய இலங்கை தமிழ் அகதிகள் 18 பேரும் தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களிற்கு வந்து சேர்ந்துள்ளனர்.

தமிழ்நாட்டு அரசு இவர்களுக்கு அகதிமுகாம்களில் இடமளிக்க விரும்பியதை அடுத்து இவர்கள் அரசாங்கச் செலவில் நேற்று முன்தினம் இரவு சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### பயிலுநர் ஆசிரியருக்கு சம்பளம்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

விசேட சம்பளப் பத்திரம் மூலம் அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த 16.03.1990 ஆம் திகதி பாடசாலைகளில் நியமனம் பெற்றவராவார்கள். (36)

## புதிய சோனக தெருவில் இலவச சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெருவில் இலவச வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கம் வைத்தியக் கலாநிதி பி ஜேசுதான், சுகாதார போதனையாளர் எஸ். யோகலிங்கம், அலுவலகதாதி ஜே. யோசேப், சுகாதாரப் பரிசோதகர் பி. துரைராஜா ஆகியோர் கலந்து கொண்டனர், இக்கூட்டம் புதிய சோனக தெரு சிற்றூர் அவையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

புதிய சோனக தெருவைச் சேர்ந்த சனசக்தி முகவர்கள், சனசமூக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள சிகிச்சை நிலையத்தின் மூலம் மக்களுக்கு சுகாதார போதனைகளும் நடாத்தப்படவுள்ளது. சுகாதார தொண்டர் பிரிவு அமைப்பின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

## இ. போ.ச. தனியார் மயம் ரிச்சர்ட் பத்திரான கண்டனம்

(கொழும்பு)

போக்கு வரத்துச் சபையை தனியார் மயமாக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவை எதிர்க்கட்சியைச் சேர்ந்த ரிச்சர்ட் பத்திரன எம். பி. கண்டித்து அறிக்கையொன்றையும் விடுத்துள்ளார்.

இ போ. சவில் அளவுக்கதிகமான ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர். பலர் எவ்வித தகுதியும் இன்றி அரசியல் செல்வாக்கால் பதவி உயர்த்தப் பட்டனர். மேலதிகமாக பல அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். இதனால் பெரும் தொகையான பணம் செலவாகிறது.

இதனால் ஊழியர் சேமலாபநிதியும் இல்லாமல் போகலாம். அரசின் இந்த மக்கள் மயமாக்கும் திட்டத்தை எதிர்த்து சகல தொழிற்சங்கங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### சிறுவர் பூங்கா அமைக்க தீர்மானம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் புதிதாக சிறுவர் பூங்கா அமைப்பதற்கு நகரசபை தீர்மானம் எடுத்துள்ளது.

வவுனியா குடியிருப்புப் பகுதியில் பிள்ளையார் கோயிலுக்கு எதிரே உள்ள நிலத்தை நகரசபை பொறுப்பேற்று இந்த நிலத்தில் சிறுவர் பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பூங்கா அமைப்பதற்காக சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந்து உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் மூலம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை நகரசபை கேட்டுள்ளது. (தி)

### கடன் சலுகை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பால் சேகரிப்பாளர்களுக்குக் கடன்அடிப்படையில்சைக்கிள் வழங்குவதற்காக வவுனியா கச்சேரி கால்நடைப் பண்ணையாளர் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்கி உள்ளது.

வவுனியா அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரில் இது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆடு, கோழி, மாடு போன்றவற்றை மக்களுக்கு வழங்குவதற்காக மேலும் பணம்வழங்க வவுனியா அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (தி)

## வருடாந்த மகோற்சவம்

சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலின் வருடாந்த மகோற்சவம் சென்ற ஆறாம் திகதி கொடியேறியது.

பத்து நாட்கள் நடைபெறும் இம் மகோற்சவம் வரும் 15 ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் இனிது முடிவுறும்.

## விளையாட்டுப்போட்டியில் புதிய சாதனை

(யாழ்விளையாட்டு நிருபர்)

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதலிடத்தைப் பெற்றதுடன் பல புதிய சாதனைகளும் நிலை நாட்டப்பட்டன.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம் பெற்ற இப்போட்டியில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 100 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

வலி-வடக்குஉதவிஅரசாங்க அதிபர் பிரிவில் கலந்து கொண்ட தில்லானா சுமங்கலி சபாரத்தினம் என்னும் போட்டியாளர் நீளம் பாய்தலில் 16 அடி 4 அங்குலம் பாய்ந்து முந்திய சாதனையை முறியடித்தார்.

அவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 13.5 செக்கனில் ஓடி முடித்து முந்தியசாதனை அளவான 13.8 செக்கன் என்பதை முறியடித்தார். மற்றொரு போட்டியாளரான ரி.வளர்மதி குண்டெறிதல் போட்டியில் முந்திய சாதனை அளவான 25 அடி 1 1/2அங்குலத்தை விடுத்து 25 அடி 10 அங்குலத்திற்கு குண்டெறிந்து சாதனை நிலைநாட்டினார்.

அஞ்சலோட்டத்தில்(4X100) பெண்கள் 5 நிமிடம் 4.5செக்கனாக முந்திய சாதனையாகவும்இருந்தது ஆனால்4நிமிடம் 45 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது. (42)

## மக்களின் வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பிலிருந்து தெல்லிப்பளைக்குச் செல்லும் வீதியில் அண்மையில் விளானில் இருந்து சில பகுதிகள் திருத்தம் செய்யப்பட்டது.


இந்த வீதி நல்ல நிலையில் இருக்கின்றபோதிலும் இதன் இருகரைப்பகுதி மட்டும் ஆங்காங்கே கிளறி புதிதாக கல் தார் போடப்பட்டது.

கிளறி எடுக்கப்பட்ட வீதியின்கல் வீதிக்கு இருமருங்கிலும் குவிந்து காணப்படுகிறது இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று விலகிச்செல்லவோ, பாதசாரிகள் நடந்துசெல்லவோமுடியாமல் உள்ளது.

அத்துடன் திருத்தக் கொண்டுவரப்பட்ட மண் மிஞ்சி வீதிக்கு அருகில் குவியலாகவும் காணப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப் பகுதி மக்கள் தெரிவித்னர். (12)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



**மணி ரெயிலர்**

தோற்றம் 10. 10. 1928 | மறைவு 28. 04. 1990

ஆறாத்துயரில் எமை எல்லாம்
ஆழ்த்திச் சென்று விட்ட
அன்புத் தந்தையே......
உங்கள்
மீளா நினைவுகளில் வாடுகின்றோம் நாமிங்கே
பரிவுடன் பாதுகாத்து பண்புடன் வளர்த்த- நின்
திருவடிக் கோவில்தனில் நெஞ்சுருகச் செய்கின்றோம்
விழி நீரால் காணிக்கை

குடும்பத்தினர்
சிவன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
மக்கள், மருமகள் பேரப்பிள்ளைகள்.
(B-1132)


### தரமிக்க உருக்கினாலான தளபாடங்களுக்கு நாட வேண்டிய ஸ்தாபனம்

"ஜனார்த்தன்ஸ்" இணுவில்

தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த உருக்கினாலான அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்

மற்றும்

காரியாலய வீட்டுத் தளபாடங்கள் அத்தனையும் அதி நவீன டிசைன்களில் என்றும் பெற்றுக் கொள்ள தாமதமின்றி நாடுங்கள்.

**ஜனார்த்தன்ஸ் இன்டஸ்ரீஸ்**

காங்கேசன்துறை வீதி, இணுவில். (B/1011)



### விற்பனைக்கு

டொயாட்டோ கைஎஸ் டீசல் வாகனம் ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தெ. ஜெயகுமாரன் (பாலு)

இருவாலை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (R-347)


## லொறியில் இருந்து விழுந்து காயம்

(புங்குடுதீவு)

ஓடிக்கொண்டிருந்த லொறியிலிருந்து விழுந்ததனால் இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க லொறி கடந்த புதன்கிழமை கிளைகளுக்கு பொருட்கள் விநியோகிக்க சென்ற வேளையில் அந்த லொறியில் சென்ற மேற்படி சங்க ஊழியரான தேவகாந்தன் என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

லொறியில்ஏற்றப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் கொண்ட பொதி ஒன்று தவறி விழுந்ததைக் கண்ட இவர் அதனைப்பிடிக்க முனைந்த போதே தவறி விழுந்தார்.

தற்போது வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை யாழ்ப்பாணம்

# கேள்விகள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் 1989 / 90

1990ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி பத்துமணி வரை என்னால் கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு கீழ்க்காணும் தொகைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்துசீல்வைத்தகேள்விப்பத்திரங்கள்ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது எனது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடலாம். கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவருடைய பிரதிநிதிகளோ சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து 20.6.1990 ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் மாலை 2மணி வரை கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- ம்
திரும்பப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 100/- ம் பணமாக அந்தந்தப் பிரதேச சபையில் செலுத்தி எனது காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | அமைந்துள்ள பிரதேச சபை | ஒப்பந்தக்காரர் பதிவு செய்து இருக்கவேண் |
|---|---|---|

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### பிரதான வீதியில் உள்ள தண்ணீர் தாங்கிக்கு திருத்த வேலைகளும் வர்ணம் பூசுதலும் குருநகர் தண்ணீர் தாங்கிக்கு வர்ணம் பூசுதலுக்குமான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் தண்ணீர் தாங்கிகளுக்கான திருத்த வேலைகளுக்கும் வர்ணம் பூசுதலுக்குமான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| வேலை விபரம் | கேள்விப் பிணைப்பணம் | கேள்விப்படிவக் கட்டணம் | ஒப்பந்தப் பதிவுத் | வேலைபூர்த்தியாவதற்கு |

## பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் 1989 / 90

1990ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி பத்துமணி வரை என்னால் கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு கீழ்க்காணும் தொகைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்துசீல்வைத்தகேள்விப்பததிரங்கள்ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது எனது காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடலாம். கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவருடைய பிரதிநிதிகளோ சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து 20.6.1990 ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் மாலை 2மணி வரை கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- ம்
திரும்பப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 100/- ம் பணமாக அந்தந்தப் பிரதேச சபையில் செலுத்தி எனது காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | அமைந்துள்ள பிரதேச சபை | ஒப்பந்தக்காரர் பதிவு செய்து இருக்கவேண்டிய தொகை: |
|---|---|---|
| 1. மயிலணி தொழில் கூடம் அமைதல் | வலி - [illegible] சுன்னாகம் | ரூபா. 2,50,000/- |
| 2. அரியாலை திருமகள் சன சமூக நிலையம். | நல்லூர் | ரூபா. 50,000/- |
| 3. கோட்டைக்காடு சைவ வாலிப சங்க ச. ச. நிலைய பாடசாலைக்கட்டிடமும் நூல்நிலையமும் | வலிதெற்கு சுன்னாகம் | ரூபா 50,000/- |
| 4. உயிரியல் வாயு உற்பத்தித்திட்டம் | | |
| 1. நெடுந்தீவு | நெடுந்தீவு | |
| 2. அனலைதீவு | ஊர்காவற்றுறை | ரூபா 50,000/- |
| 5. விளான் சந்தியிலிருந்து உயரப்புலம் வரை வீதி திருத்துதல் | வலி. தெற்கு, மேற்கு மானிப்பாய் | ரூபா 1,00,000/- |
| 6. கைதடி வடக்கு நவபுலம் வீதி திருத்துதல் | சாவகச்சேரி | ரூபா 1,00,000 - |
| 7. பின்வரும் இடங்களில் பொதுக் கிணறுகள் அமைத்தல் | | |
| 1. மண்டைதீவு | வேலணை | ரூபா 50,000/- |
| 2. எழுவைதீவு | ஊர்காவற்றுறை | ரூபா 50,000/– |
| 3. வேலணை | வேலணை | ரூபா 50,000/– |
| 4. யோகபுரம் உரும்பிராய் | வலி. கிழக்கு நீர்வேலி | ரூபா 50,000/- |
| 5. கைதடி மேற்கு (இரண்டு) | சாவகச்சேரி | ரூபா 50.000/- |
| 6. திடற்புலம் ஏழாலை | வலிதெற்கு சுன்னாகம் | ரூபா 50, 000/– |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பின் கடிதஉறையில் இடதுபக்க மேல்மூலையில் உள்ளூராட்சித் திணைக்கள வேலை எனக்குறிப்பிட்டு அவ்வேலையின் பெயரைக் குறிப்பிடுக. மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையில் 5%ஒப்பந்தத்தின் படி வேலையை திருப்திகரமாக செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் குறிப்பிடும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமானதாக முடித்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல்,ஏதாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்துத் தீர்மானங்கள் இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபைத்தலைவரை சார்ந்ததாகும்.

கிராமோதய சபைகள் சனசமூக நிலையங்கள் கிராமமுன்னேற்ற சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் கேள்விகோர விரும்பின் அவை சம்பந்தப்பட்ட உறுதி செய்யும் அதிகாரியினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

உள்ளூராட்சித்திணைக்களம்,
தேசிய வீடமைப்புச் செயலகம்
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

ஒப்பம்
சு. டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(B-1128)

(புங்குடுதீவு)

ஓடிக்கொண்டிருந்த லொறியிலிருந்து விழுந்ததனால் இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க லொறி கடந்த புதன்கிழமை கிளைகளுக்கு பொருட்கள் விநியோகிக்க சென்ற வேளையில் அந்த லொறியில் சென்ற மேற்படி சங்க ஊழியரான தேவகாந்தன் என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

லொறியில்ஏற்றப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் கொண்ட பொதி ஒன்று தவறி விழுந்ததைக் கண்ட இவர் அதனைப்பிடிக்க முனைந்த போதே தவறி விழுந்தார்.

தற்போது வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் இவர் புங்குடுதீவில் பிரபல நாடக மன்றம் ஒன்றின் உறுப்பினராவார். இவரது விபத்தினால் இம் மன்றத்தின் செயற்பாடுகள் முடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (22)

## சிற்றூர் அவைகள்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் தற்போது பொதுமக்களும் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரும் பிரதேச வாரியமாக சிற்றூர் அவைகளை அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

இவ்வமைப்புகளை அமைத்து மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் வடமராட்சி விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் குணம் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றார். (68)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### பிரதான வீதியில் உள்ள தண்ணீர் தாங்கிக்கு திருத்த வேலைகளும் வர்ணம் பூசுதலும் குருநகர் தண்ணீர் தாங்கிக்கு வர்ணம் பூசுதலுக்குமான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் தண்ணீர் தாங்கிகளுக்கான திருத்த வேலைகளுக்கும் வர்ணம் பூசுதலுக்குமான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| 1<br>வேலை விபரம் | 2<br>கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப் படக்கூடியது | 3<br>கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கப்பட முடியாதது | 4<br>ஒப்பந்தப் பதிவுத் தொகை | 5<br>வேலைபூர்த்தியாவதற்கு வழங்கப்படும் காலம் |
|---|---|---|---|---|
| 1. குருநகர் தண்ணீர் தாங்கிக்கு வர்ணம் பூசுதல் | 500/- | 100/- | 50,000 | 2 மாதங்கள் |
| 2. பிரதான தண்ணீர் தாங்கிக்கு திருத்த வேலைகளும் வர்ணம் பூசுதலும் | 500/- | 150/- | 150,000 | 4 மாதங்கள் |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நீர்வேலைப் பொறியியலாளரிடமிருந்து 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விக்கு எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விபடிவக்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நீர் வேலைப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(B/1129)

## தேவை

எமது நிறுவனத்தில் “பியோன்” வேலையில் ஈடுபட 18 - 30 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் தேவை.

O/L படித்த யாழ்நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை

11. 6. 90 பி-ப 3. 30 மணியளவில் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

166/1 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ம் மாடி)

(B- 1015)

## விக்னா ரியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 91 DAY CLASSES

(8.00 - 1.00)

அலகு 1 இலிருந்து ஆரம்பம்
(12.6.90)

மு. குறிப்பு:
(1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
(2) முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.
(3) முற்றிலும் பாடசாலை போன்றது.
(4) விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.
(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B 1012)

### சிந்தனைக்கு

தீய சக்திகளுடன் சாத்வீக ஒத்துழையாமை என்றாலே, ஆக்கசக்திகளுடன் ஒத்துழைப்பு என்றுதான் பொருள்.

- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# இனியும் அங்கம் வகிக்கத்தான் வேண்டுமா?

சர்வகட்சி மாநாட்டில் பல அரசியல் கட்சிகளும் குழுக்களும் அங்கம் வகிக்கின்றன. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகள் குழுக்கள் மட்டுமல்ல பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்காத கட்சிகளும் குழுக்களும்கூட சர்வகட்சி மாநாட்டில் அங்கம் வகிக்கின்றன.

இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவேண்டுமென்று அடம்பிடித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை என்ற ஈ. பி. ஆர். எல். எவ். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைச் சந்தித்துப் பேசியபோது தமிழகமுதல்வர் கலைஞர் கருணாநிதி எடுத்த சமரச முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்தது.

இந்தக் கோரிக்கையை ஆராயக்கூடிய பொருத்தமான ஒரே இடம் சர்வகட்சி மாநாடுதான் என்று கூறினார் அமைச்சர் ரஞ்சன், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்து வந்த ஈ. பி. ஆர். எல். எவ். பத்தொன்பது அம்சக் கோரிக்கையுடன் சர்வகட்சி மாநாட்டுக்குச் சென்றது.

சர்வகட்சி மாநாட்டில் இதுவரை இந்த பத்தொன்பது அம்சக்கோரிக்கை ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் பத்தொன்பது அம்சக் கோரிக்கையுடன் அவர்கள் சர்வகட்சி மாநாட்டுக்குள் நுழைந்ததும் அதுவரை பார்வையாளர்களாகக் கலந்துகொண்டிருந்த விடுதலைப்புலிகள் மாநாட்டிலிருந்து வெளியேறிவிட்டனர்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா ஆட்சிபீடத்துக்கு வந்ததும் நாட்டில் தலைதூக்கிநின்ற பல பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு ஓர் உபாயமாக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார்.

இளைஞர்களின் அமைதியின்மைக்கான காரணங்களை ஆராய்ந்துதீர்வுகாணவும் இலங்கையின்இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் இந்த சர்வகட்சி மாநாடு வழிகாணவேண்டுமென்பது ஜனாதிபதி பிரேமதாசாவின் கோரிக்கையாகும்.

சர்வகட்சி மாநாடு இதுவரை பல கூட்டங்களை நடத்தியிருக்கிறது. சில அறிக்கைகளையும் தயாரித்து இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் முரண்பாடில்லை.

இப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதிலும் யார் தீர்வு காண்பது என்பதிலும் முரண்பாடுகள் அதிகம். இவற்றை ஆராய்ந்து ஒரு முடிவு காணக்கூடிய அரங்கம் உண்மையில் சர்வகட்சிமாநாடுதான்.

ஆனால் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் அதேசமயம் மாநாட்டுக்கு வெளியே அந்த மாநாட்டின் நோக்கத்துக்கு முற்றிலும் எதிர்மாறாக நடந்து கொள்பவர்கள் எப்படி சர்வகட்சி மாநாட்டில் ஒருமித்த முடிவுக்கு வரமுடியும்!

# பெண்ணினத்தைக் காசைக் கொண்டு மதிப்பிடும் சீதன முறை தேவையா?



தேசவழமைச் சட்டம் வரதட்சணை முறைக்கு இடமளிக்கிறது. பெற்றோர் தன் பிள்ளைகளுக்குச் சீதனமாக வழங்கிய சொத்தை - அசைவற்ற ஆதனங்களைப் பெண் தன்னிச்சையாக விற்க முடியாது. தேசவழமைச் சட்டத்தின் பிரகாரம் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்கப்படும் சொத்திலும் வாரிசு ஆட்சி கிடையாது. கணவனின் அனுமதியுடனேயே பெண் தனக்குச் சீதனமாக வழங்கப்பட்ட ஆதனத்தை விற்கவோ அல்லது மாற்றவோ முடியும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா ஈழநாதத்துக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சீதன முறையின் கீழ் பெண்கள் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது என்றும், அது பெண்ணினத்தை இம்சிக்கிறதென்றும், பெண்ணைக் காசைக் கொண்டு மதிப்பிடும் ஒரு போட்டிச் சமூகத்தை ஏற்படுத்தி விடுகின்றதென்றும் குறிப்பிட்டார்.

**ஆண்களைத் தாக்கவில்லை**

ஆண்களில் குற்றமில்லை; நாம் ஆண்களைத் தாக்கவில்லை. வரதட்சணை முறையைத் தான் நாம் சாடுகின்றோம். பெண்களை வைத்திருக்கும் பெற்றோர் சீதனத்தைக் கொடுத்துத் தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யக்கூடாது. சீதனத்தைக் கொடுத்து திருமணம் செய்யோம் என்று பெண்களும் திடசங்கற்பம் எடுக்கவேண்டும். சீதனம் கேட்பவர்களையும் நாம் நிராகரிக்க வேண்டும் என்று செல்வி ஜெயா தமது கருத்தைக் கோடிட்டுக் காட்டினார்.

பெண்ணுக்குக் கொடுப்பது சீதனம். ஆணுக்குக் கொடுப்பது முதிசம். மாற்றங்கள் நிறைந்ததே வாழ்க்கை, சமுகம் என்று சொன்னாலும் அனைத்து மாற்றங்களையும் இன்றைய காலச் சூழ்நிலையில் உடனடியாகச் செய்ய முடியாது. ஆகவே, முதிசம், சீதனம் தொடர்பான தேச வழமைச் சட்டங்களை உடனடியாகத் தூக்கி எறிய முடியாது. நாங்கள் படிப்படியாக நடவடிக்கை எடுக்க உள்ளோம் என்று மனஉறுதியுடன் கூறினார் ஜெயா.

சீதனத்துக்கு எதிரான உங்கள் போராட்டம் எவ் வகையில் அமையும்?- இக் கேள்விக்கும் பதிலளிக்கையில்,

எல்லோரையும் வரதட்சணை விவகாரத்தில் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்கப் போகிறேன். எல்லோரும் பங்காளிகளாகவிருந்து எமக்கு உதவுவது தான் பொருத்தமானது. எமது முதல் கட்ட நடவடிக்கையாகச் சீதனத்துக்கு எதிரான ஒரு பிரச்சார இயக்கத்தை ஆரம்பிக்கவுள்ளோம். பட்டி தொட்டிகளிளெல்லாம் சீதனத்துக்கு எதிரான பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இந்த இயக்கத்தால் ஏற்படும் பாதிப்பு, விளைவுகளைப் பொறுத்து எமது அடுத்த கட்டப் போராட்ட வடிவம் அமையும் என்றார்.

சில வகையான வேலைகளை மாத்திரம் தான் செய்யக் கூடியவர்கள் என்ற மரபுரீதியான ஒரு எண்ணக்கரு நிலவுகிறது.

> விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி சமீபத்தில் நடாத்திய மாநாட்டில் பெண்கள் விடுதலையோடு தொடர்புடைய சீதனப்பிரச்சினையை ஒழிக்க ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்
>
> சர்ச்சைக்குரிய சீதனப்பிரச்சினை, பெண் உரிமை பற்றி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா எமது செய்தியாளரிடம் விளக்கினார்.
>
> அவற்றில் சில பகுதிகள்:

## ஆணை விலை கொடுத்து வாங்கினாலும் பெண்ணுக்கு அவன்மீது உரிமையில்லை!

**சகலரின் ஒத்துழைப்பும் தேவை**

ஒரு பொருளை விலை கொடுத்து வாங்கினால் அதன் மேல் உரிமையுண்டு. ஆனால் ஆணை விலை கொடுத்து வாங்கியும் பெண்களுக்கு உரிமையில்லை என்கிறார் ஜெயா.

**தொழில் நுட்பமும் பெண்களும்**

பெண்களுக்கெதிரான சகல விதமான அடக்குமுறைகளுக்கெதிராகவும் எமது போராட்டம் அமையவுள்ளது. பெண்களுக்சென்று பிரத்தியேகமாக தையல் வேலை, கேக் அடித்தல் போன்ற மரபைத் தொடர்ந்து வருகிறார்கள். மனித மனங்களில் பெண்கள் நாம் சகல விதமான தொழில் நுட்பத் திறங்களையும் பெண்களுக்குப் போதிக்கவுள்ளோம். இவ் வகையில் சில தொழில் நுட்பப் பயிற்சிகளை ஏலவே ஆரம்பித்துள்ளோம். சூழலுக்கேற்றபடி தொழில் நுட்பக் திறன்களை வளர்ப்பது தான் எமது நோக்கம். எலக்ரோணிக்ஸ், ஜெனறேற்றர், வாகனம் திருத்தல், தச்சு வேலை இத்தியாதி தொழில் திறன்களைப் பெண்கள் மத்தியில் வளர்க்கவுள்ளோம். படிப்படியாகச் சகல விதமான தொழில்களையும் பெண்கள் படிகக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தித் தரப்படும்.

நம்பிக்கையுடன் நிதானமாக, பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செல்வி ஜெயா தனது கருத்துக்களை விளக்கி விடை பெற்றுக் கொண்டார்.

### சித்திரத்தேர்

(தீவுப்பகுதி)

நாரந்தனை-சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்று செய்ய தேர்த் திருப்பணிச் சபையினர் முன்வந்துள்ளனர்.

இத்தேரின் அச்சேற்று விழா (பூதப்பார்-ஸ்தாபிதம்) புதன் கிழமை காலை நடைபெற்றது. (15)

## சுகாதார சிகிச்சை நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(வவுனியா)

கோவில்குளம் சுகாதார சிகிச்சை நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வன்செயல் சம்வங்கள் காரணமாக 82 ஆம் ஆண்டு செயலிழந்திருந்த இந்த சுகாதாரச் சிகிச்சை நிலையம் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி திரு.கே. இளங்கோவினால்ஆரம்பிக்கப் பட்டது.

இந்தச் சிகிச்சை நிலையம் ஒவ்வொரு மாதங்களின் கடைசி வியாழக்கிழமைகளில் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிலையத்தில்குழந்...

...ளின் சுகாதார பற்றாக்குறைகளை சீர்படுத்த முடியும்.என்றும் இதோடு சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இந்தச் சிகிச்சை நிலையம் கடந்த சில வருடங்களாக செயலிழந்திருந்த காரணத்தினால், கோவில் குளம் கிராம மக்களும் அயல்கிராமங்களும் வைத்திய சிகிச்சை பெறுவதில்...

### மம்மிக்குளம்

### சிறுபோகநெல் வேளாண்மை பாதிக்கப்படும்

(கிளிநொச்சி)

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின்கீழ் 6642 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அத்துமீறியும், அடாத்தாயும்செய்கைபண்ணுவோரால் மேலதிகமாக 1000 ஏக்சர்களுக்கு மேல் கூடுதலாக செய்கைபண்ணப் படுகிறது.

உதாரணமாகஇரணைமடுக் குளத்தின்கீழ் 4500 ஏக்கர்...

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ...
வந்ததும் நாட்டில் தலைதூக்கிநின்ற பல பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு ஓர் உபாயமாக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார்.

இளைஞர்களின் அமைதியின்மைக்கான காரணங்களை ஆராய்ந்துதீர்வுகாணவும் இலங்கையின்இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் இந்த சர்வகட்சி மாநாடு வழிகாணவேண்டுமென்பது ஜனாதிபதி பிரேமதாசாவின் கோரிக்கையாகும்.

சர்வகட்சி மாநாடு இதுவரை பல கூட்டங்களை நடத்தியிருக்கிறது. சில அறிக்கைகளையும் தயாரித்து இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் முரண்பாடில்லை.

இப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதிலும் யார் தீர்வு காண்பது என்பதிலும் முரண்பாடுகள் அதிகம். இவற்றை ஆராய்ந்து ஒரு முடிவு காணக்கூடிய அரங்கம் உண்மையில் சர்வகட்சிமாநாடுதான்.

ஆனால் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் அதேசமயம் மாநாட்டுக்கு வெளியே அந்த மாநாட்டின் நோக்கத்துக்கு முற்றிலும் எதிர்மாறாக நடந்து கொள்பவர்கள் எப்படி சர்வகட்சி மாநாட்டில் ஒருமித்த முடிவுக்கு வரமுடியும்!

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதுடன் அவர்களின் தன்மானத்தையும் கௌரவத்தையும் அவமானப்படுத்துவது அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம்.

இந்த ஆறாவது திருத்தம் கொண்டுவரப்பட்டதனால் 1977 ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தனர். ஆறாவதுதிருத்தத்தால் தொழில் இழந்தவர்கள் பலருமுள்ளனர்.

இந்த ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர். அரசும் இதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கு ஈரோஸ் அமைப்பின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியும் ஆதரவு தெரிவித்தது.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டுமெனக் கோரி பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை கொண்டு வரவும் ஈழவர் ஜனநாயக முன்னணி முன் வந்தது.

சர்வகட்சி மாநாட்டில் இந்த முன்னணியும் அங்கம் வகிக்கிறது. இதேமாநாட்டில் அங்கம் வகிக்கும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆறாவது திருத்தத்தை நீக்கக்கூடாது என்று அடம்பிடிக்கிறது. இதற்காக இதர தமிழ்க் கட்சிகளினதும் குழுக்களினதும் ஆதரவைத் திரட்டப் போவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்திருக்கிறார்.

"தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையானால் சரி" என்று கருதுபவர்கள் தனது நோக்கத்தை ஈடேற்றுவது என்பது அஷ்ரப்பின் நம்பிக்கை!

செயல்படாமலிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தவேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் மற்றொரு கோரிக்கை. இதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காகப் புதிய சட்டம் ஒன்றை அவசர அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவது என்று அமைச்சரவையும் தீர்மானித்து இருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்தவேண்டுமென்பதில் ஈழவர் ஜனநாயக முன்னணிக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இதை ஒரு கோரிக்கையாகவும் அது முன் வைத்திருந்தது.

சர்வகட்சி மாநாட்டில் அங்கம் வகிக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். மாகாணசபையைக் கலைத்து புதிய தேர்தல் நடத்தும் அரசின் முயற்சியை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரிவித்திருக்கிறது. இதற்கு அஷ்ரப்பின் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு கிடைக்கலாம்!

இதன்பின்னரும் ஈழவர் ஜனநாயக முன்னணி மட்டுமல்ல தன்மானமுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் சர்வகட்சி மாநாட்டில் அங்கம் வகிக்கவேண்டியது அவசியம்தானா?

தைக் கொடுத்துத் ... பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யக்கூடாது. சீதனத்தைக் ... உரிமையில்லை ... ஜெயா. ... என்கிறார் ... தொடர்ந்து வருகிறார்கள். மனித மனங்களில் பெண்கள் ... வேலை இத்தியாதி தொழில் ... பெற்றுக் கொண்டார்.

## சித்திரத்தேர்

(தீவுப்பகுதி)

நாரந்தனை-சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்று செய்ய தேர்த் திருப்பணிச் சபையினர் முன்வந்துள்ளனர்.

இத்தேரின் அச்சேற்று விழா (பூதப்பார்-ஸ்தாபிதம்) புதன் கிழமை காலை நடைபெற்றது. (15)

# சுகாதார சிகிச்சை நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(வவுனியா)

கோவில்குளம் சுகாதார சிகிச்சை நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வன்செயல் சம்வங்கள் காரணமாக 82 ஆம் ஆண்டு செயலிழந்திருந்த இந்த சுகாதாரச் சிகிச்சை நிலையம் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி திரு.கே. இளங்கோவினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சிகிச்சை நிலையம் ஒவ்வொரு மாதங்களின் கடைசி வியாழக்கிழமைகளில் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிலையத்தில்குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கான வைத்தியம் செய்யப்படும் என்றும் இதனால் இப்பகுதி மக்களின் சுகாதார பற்றாக்குறைகளை சீர்படுத்த முடியும். என்றும் இதோடு சம்பந்தப் பட்ட அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இந்தச் சிகிச்சை நிலையம் கடந்த சில வருடங்களாக செயலிழந்திருந்த காரணத்தினால், கோவில் குளம் கிராம மக்களும் அயல்கிராமங்களும் வைத்திய சிகிச்சை பெறுவதில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## மம்மிக்குளம் ஆழமாக்கப்பட வேண்டும்

ஆசிரியர்,
ஈழநாதம்.

வட்டக்கச்சி, ஆறுமுகம் வீதி மம்மிக்குளம்பகுதி வாழ்மக்கள் குடிநீருக்கும், அன்றாடதேவைக்கும் நீரின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பகுதியில் குழாய்க் கிணறுகளும் கற்பாறையில்லாமையினால்ஒரிரு வருடங்களில் பயனளிக்காதுள்ளன. இக்குளத்தில் கோடை காலங்களில் மக்களும், மந்தைகளும் குளிப்பதாக நினைத்து சேற்றைப் பூசிக்கொள்கின்றன இப்பரிதாபமான காட்சியை இன்னும் ஒரிரு மாதங்களில் இங்கு காணலாம்.

இக்குளம் யாழ். மாவட்டத்துக் குளங்கள் போன்று உட்பதிந்த குளமாகும். இக்குளத்தைஎவ்வளவு ஆழமாக்க முடியுமோ அவ்வளவுக்கு ஆழமாக்கினால் இப்பகுதியிலுள்ள கிணறுகள் எல்லாம் நீர் வற்றாதுநிற்கும். நீர் குளத்திலும் கோடை காலத்தில் வற்றாது நிற்கும். இக்குளத்தைச் சுற்றி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். இதனால் மக்களுக்கு இக் குளம் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது இக்குளத்தைச் சுற்றி நிழல் தரும் மரங்கள் ஏராளமாக உள்ளன. அத்துடன் தாமரை போன்ற மலர்களும் பூத்த வண்ணம் இருக்கின்றன. இதனால் இப்பகுதி மிகவும் அழகு வாய்ந்த இயற்கைக்காட்சிகளுடன் உள்ளன. அருகேகோவிலும் இருப்பதால் இக்குளத்தை ஆழமாக்கித் தரும்படி இது சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களிடம் (அதிகாரிகளிடம்) கேட்கிறோம்.

தியாகராஜா.

வட்டக்கச்சி,

### மக்கள் மடல்

## மனப்பாங்கு மாறுமா?

ஆசிரியர்.
ஈழநாதம்,

இன்றைய காலகட்டத்தில் பொதுமக்கள் தமது பல்வேறு தேவைகள் நிமித்தம் தினமும் அரசாங்க காரியாலயங்களுக்கு சென்றுவருதல் தவிர்க்க முடியாதது. இந்த வகையில் நல்லூர் உ. அ. காரியாலயமும் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பினைக் கொண்டது.

மேலும் இக்காரியாலயம் மக்கள் தொகை அதிகமான பகுதிகளைத் தன்னகத்தேகொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. தம் தேவைக்காக இங்கு செல்லும் எவரும் இலகுவில் காரியமாற்றிக் கொள்ள முடிவதில்லை. ஓரளவிற்குஅரசாங்கக் காரியாலய நடைமுறைகள் தெரிந்தோர் கூட இக் காரியாலயத்தில் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. காரணம் இங்குள்ள ஊழியர்களின் பொறுப்பின்மையும் எவரையும் சர்வசாதாரணமாக உதாசீனம் செய்யும் போக்குமாகும். அவலங்களை அனுபவித்த மக்கள் அது தொடர்பாக நல்லூர் உ.அ. காரியாலயத்துக்குச் செல்லும் போது அங்கு உதாசீனம் செய்யப்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும் மக்கள் சேவைக்கென மக்களின் வரிப்பணத்தில் நியமனம் பெற்றவர்கள் மக்களைப் புறக்கணிக்கும் நிலை மாறுமா?

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் தலையீட்டு நியாயம் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

சி.சிவபாலன்

நல்லூர்.

## புனித சிசிலியா பாடசாலை மட்டக்களப்பில் சாதனை

(கல்லாறு)

பத்தொன்பது வயதுக்குட்பட்டதும், பதினேழு வயதுக்குட்பட்டதும், பதினைந்து வயதுக்குட்பட்டதுமான மட்டக்களப்பு மாவட்ட ரீதியிலான பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்று மட்டக்களப்பு புனிதசிசிலியா பெண்கள்பாடசாலை வெற்றி வாகை சூடியது.

முதல் இரண்டு பிரிவிலும் மட்டக்களப்பு வின்சன் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைபெற்றது.

பத்தொன்பது வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான உடற் பயிற்சிப்போட்டியில் முதலாம் இடத்தை வந்தாறுமூலை மகாவித்தியாலயமும் இரண்டாம் இடத்தை வின்சன் மகளிர் கல்லூரியும், பதினேழு வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தை வின்சன் மகளிர் கல்லூரியும் இரண்டாம் இடத்தை புனித சிசிலியா பெண்கள் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

## தெரு விளக்குகள் சீரமைப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை எல்லைப் பகுதி வீதிகளில் உள்ள தெருவிளக்குகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இரவுப் பொழுதுகளில் வவுனியா நகரம் வெளிச்சமாகக் காணப்படுகிறது.

கடந்த கால வன்செயல் சம்பவங்கள் காரணமாக மேற்படி நகரப்பகுதி மின்கம்பங்களில் மின்விளக்குகள் எரியாமல் இருந்தன.

வவுனியா நகரசபை நிர்வாகம் எடுத்த துரித நடவடிக்கையை அடுத்து வீதிகள் எங்கும 'ரியூப்' பல்புகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் பல பகுதி வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்த நகரசபைநிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (தி)

## பதவி வெற்றிடம்

குடிவரவுகுடியகல்வு திணைக்களத்தில் அதிகாரம் பெற்ற அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இம்மாதம் 25 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பலாம் இது பற்றிய விபரங்கள் ஜூன் 8ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பணம் செலுத்தாத தொலைபேசி துண்டிக்கப்படுமாம்!

தொலைத்தொடர்பு திணைக்களம் நாட்டில் நிலுவைப்பணம் செலுத்தாத தொலைபேசி பாவனையாவர்களின் தொலைபேசிகளை துண்டிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சுமார் ஏழாயிரம் பேரின் தொலைபேசிகள் இவ்வாறு துண்டிக்கப்படவுள்ளதாகவும் கடந்த மார்ச் 15 ஆம் திகதி வரை இதற்கு காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது எனவும் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சிறுபோக நெல் வேளாண்மை பாதிக்கப்படும்

(கிளிநொச்சி)

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின்கீழ் 6642 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அத்துமீறியும், அடாத்தாயும்செய்கைபண்ணுவோரால் மேலதிகமாக 1000 ஏக்சர்களுக்கு மேல் கூடுதலாக செய்கைபண்ணப் படுகிறது.

உதாரணமாகஇரணைமடுக் குளத்தின்கீழ் 4500 ஏக்கர் செய்கைபண்ணக் கூடியளவு நீரே உள்ளது. அவ்வாறிருக்க அடாத்சாகச் செய்வோர் அத்துமீறி 500 ஏக்கர் வரை கூடுதலாகச் செய்துள்ளார்கள்.

இதனால் இரணைமடுக் குளத்தின்கீழ் செய்கை பண்ணப்படும் சிறுபோக வேளாண்மை பாதிப்புறப் போகின்றதென கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் கச்சேரியில் நடந்த மாவட்ட விவசாய உபகுழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சிறுபோக நெல் வேளாண்மையைப் பயனுள்ளதாக்குவதற்கு உடனடியாக அடாத்தாகச் செய்தவர்கள் தமது செய்கையைக்கைவிடவேண்டுமென அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

பயிர்ச்செய்கையாளர்அனைவரும் தம்மோடு ஒத்துழைத்து கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக நெல் வேளாண்மையைவெற்றிகரமாக்கஉதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

## ஆணையாளருக்கு பாராட்டு வைபவம்

(தீவுப்பகுதி)

வேலணை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பொறுப்பேற்ற திரு.என். சடாட்சர சண்முகதாஸுக்கு வேலணை பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் அவரது சேவையைப் பாராட்டி பாராட்டு வைபவமொன்றை நடாத்தியது.

வேலணை பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் திரு. பொ. நடராசா தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் சங்க உபதலைவர் திரு. கி. பீற்றர், திரு.செ. சண்முகவடிவு (ஆசிரியர்) பொதுமுகாமையாளர் திரு. வே.செல்லத்துரை ஆகியோர் உரையாற்றினர். (15)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# நீர்ப்பாசனத்திட்டத்தில் காணியற்றோருக்கும் தண்ணீர்ப் பங்குகள் உள்ளன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒருகுழி நிலம்கூட இல்லாதவர்களுக்கு தண்ணீர்ப்பங்குகள் இருப்பதாக பதிவேடுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக இரணைமடுத்திட்ட ஊரியான் உபகுழுத்தலைவர் திரு மு.கந்தசாமி கிளிநொச்சி மாவட்ட காணி ஆணையாளருக்குச்சுட்டிக்காட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக அவர்சுட்டிக் காட்டியுள்ளதாவது:-

ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு இலக்கம் சம்பந்தப்பட்டதிணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இலக்கமுடைய காணிகளுக்கும் தண்ணீர்ப்பங்குகள் வழங்கப்படுகின்றன. காலத்துக்குக் காலம் குளத்தில் இருக்கும் நீரைப் பொறுத்துசிறுபோகம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தால் நீர்ப்பங்குகள் பிரித்து வழங்கப்படுகின்றன.

காணி இல்லாத பலரின் பெயர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிலுள்ள பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளன. இப்பெயர்களுக்குரிய பங்குகள் இடைத்தரகர்களினால் 1,500 ரூபாமுதல் 3 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. இது தவிர வயல்கள் இருப்பவர்கள் குறிப்பிட்ட காலத்தில் வந்து பங்குக்குரிய பணத்தை சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் கட்டத்தவறியவர்களின் பங்குகளும் தரகர்மாரால் பங்குப்பணம் (நீர்ப்பாசன பராமரிப்பு வரி) கட்டப்பட்டு பங்குகள் கூடிய விலைக்கு விற்கப்படுகின்றன.

பதிவேட்டில் இருக்கும்இலக்கத்தின் ஏக்கர் அளவிற்குஏற்ப காணிகள் இல்லாது இருப்பதால் நீர் பங்கிடுவதில் சம்பந்தப்பட்டதிணைக்களங்களிற்கு பெரும்பிரச்சினையாகஇருந்து வருகிறது.

இது சம்பந்தமாக விவசாயிகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை மாவட்ட காணி ஆணையாளர் திணைக்களமும் இணைந்து இடைத்தரகர்களைக் கண்டுபிடித்து உண்மையானவர்களுக்கு நீர்வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான திருட்டுக்கள் தொடர்ந்தும் இடம்பெறாது இருப்பதற்கு அவ்வப்பகுதிகளிலுள்ள திட்ட உபகுழுக்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டக் குழுக்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாயின் இவ்வாறான தவறுகளைக்கண்டுபிடிப்பதன் மூலம் சட்டப்படி விவசாயம் செய்பவருக்கும், காணி ஆணையாளர் திணைக்களத்திற்கும், நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கும் உதவ முடியும் எனவும் திரு. கந்தசாமி குறிப்பிட்டார். (49)

## வெளிநாட்டில் வேலை செய்ய விரும்புவோருக்கு கடன் உதவி

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்புவோருக்கு இலங்கை வங்கி 12,000ரூபாகடன்உதவி வழங்கும் திட்டமொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் இணைந்து இக்கடன் திட்டம் செயல் படுத்தப்படும்.

இலங்கை வங்கி இத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவென ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## வடமராட்சியில் பி. பி. சி. செய்தி நிருபர்

(வல்வெட்டித்துறை)

வடமராட்சியின் சேதமுற்ற சில பகுதிகளை பி.பி.சி. செய்தியாளர் திரு. கிறிஸ்தோபர் மொறிஸ்கேனல் நேற்று பார்வையிட்டார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை பருத்தித்துறையில் இலங்கை – இந்திய இராணுவக் கலவரங்களால் சேதப் படுத்தப்பட்ட பகுதிகளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஸ்ரீலங்கா அரச இராணுவக் கெடுபிடிகளின் போது கரும்புலி மில்லரின் தாக்குதலால் சேதப்படுத்தப் பட்ட கட்டிடத்தினையும் பார்வையிட்டுச் சென்றார்.

பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையின் கஷ்ட நிலை தேவைகள்பற்றி வைத்தியசாலைஉயர் அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை, தாதிகள் முகாமையாளர் ரி. பரஞ்சோதி டாக்டர் எஸ்.குழந்தைவேற்பிள்ளை ஆகியோர்கள் விளக்கிக் கூறியதுடன் சம்பந்தப்பட்டஇடங்களையும்நேரில் காட்டினர்.

பல இடங்களில் புலிகள் போராளிகள் சம்பந்தமான சுவரொட்டிகளையும் படம் பிடித்துச் சென்றார். (68)

## இன்று காலை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்லுடைக்கும் இயந்திர உரிமையாளருக்கான கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை காலை வடமராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரிவுக் காரியாலயத்தில் நடைபெறும். கல்லுடைக்கும் இயந்திர உரிமையாளர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

## பதினைந்தாம்திகதிக்கிடையில் வட்டஅவைகள்அமைக்கப்படும்

(வவுனியா)

எதிர்வரும் பதினைந்தாம் திகதிக்கு முன்னர்,சகல பகுதிகளிலும், அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அடிப்படையில் வட்ட அவைகள் அமைக்கப்பட உள்ளன. எதிர்வரும் இருபத்திரண்டாம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் சகல பகுதிகளிலும் மாவட்ட அவைகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி தகவலை, வன்னிப் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பகுதி சிற்றூர் அவைகளின் செயலாளர், பொருளாளர், தலைவர் ஆகியோர் இணைந்து அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்ட அவைகள் அமைப்பார்கள் என்றும் வட்டஅவை உறுப்பினர்கள் இணைந்து, மாவட்ட அவைகளை அமைப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று பத்தாம் திகதி மாலை செட்டிகுளம் பாடசாலையில் வட்ட அவை அமைக்கப்படும்.

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான வட்ட அவைத் தெரிவு, நாளை பதினொராம் திகதி மாலை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம் பெறும்.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 ஆம் திகதி மாலை நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் மேற்படி அவைத் தெரிவு இடம் பெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 13ஆம் திகதி காலை முல்லைத்தீவு நகரப் பகுதியில் வட்ட அவை அமைக்கப்படும். அதே தினம் மாலை கொக்குளாய் பகுதிக்கான வட்ட அவைத் தெரிவும் இடம் பெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கானதும், அதே தினம் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கானதுமான

### விமான நிலையத்தில் தங்கம் விற்பனை

(கொழும்பு)

கட்டுநாயக்காவிமானநிலையத்தின் இறங்குதுறையில் மத்திய வங்கி தங்க விற்பனை நிலையம் ஒன்றை இம்மாதம் 21 ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளது.

வெளிநாட்டுப் பாஸ்போட்டுக்களை வைத்திருக்கும் விமானநிலையத்தில் தரித்துச் செல்லும் பயணிகளுக்கு ஆரம்பத்தில் தங்கம் விற்கப்படும்.

இதற்கான பணமும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப் படவேண்டும்.

சர்வதேச சந்தையில் உள்ள ஒருஅவுன்ஸ் தங்கத்தின் விலை 35 அமெரிக்க டொலரின்படி இது விற்கப்படும்.

காலப் போக்கில் உள்ளூர் ஆபரணத் தொழிலாளர்களுக்கும், ஏனைய விமானப்பயணிகளுக்கும் இதனைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்படும்.

தங்கக் கடத்தலைத் தடுக்கவும், வெளிநாட்டு நாணய மாற்றைச்சம்பாதிக்கவும் இது எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தங்க விற்பனை நிலையம்முழுமையாகச்செயற்படத் தொடங்கியதும் ஏற்றுமதிக்காக ஆபரணம்தயாரிப்போருக்குத் தங்கத்தை இறக்குமதி செய்ய விசேட வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இருமி நாசினி அருந்தி இளைஞன் தற்கொலை

சட்டவிரோத
1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்கிறார்,

8-6-90 வெள்ளிக் கிழமை கரவெட்டி பொதுசன நூலகத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை அவர்கள் தலைமையில் பொதுஸ்தாபன உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் உப அலுவலக உத்தியோகத்தர்களுடன் சட்டவிரோத மின்பாவனையைத் தடைசெய்வதுபற்றிய

அதிகாரம்
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிபுணத்துவம் பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவர்.

அப்பிரதேசசபை பிரிவுகளில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தல் போன்ற அதிகாரங்கள் பிரதேச சபைக்கு வழங்கப்படுகின்றன.

மாகாண சபையின் நேரடி

மாகாணசபைகளின்
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கும்வரைபதில்செயலாளர்களின் கீழ்தான் நிர்வாகம் செயற்படும்.

மாகாணசபையால் இவ்வாண்டு மார்ச்மாதம் முதலாம் திகதிக்குப் பின்பு நியமனம் பெற்றவர்கள்முப்பத்துமூன்று பேர் வேலைநீக்கம் செய்யப் பட்டனர். பின்பு மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

வடக்கு,கிழக்கு மாகாண சபையினால் பட்டதாரி முகாமைத்துவப் பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சியின் பின்பு உத்தியோகம் வழங்கப்படும்என்ற உத்தரவாதம் வழங்கப்படவில்லை.

பட்டதாரி முகாமைத்துவப் பயிற்சி முடிந்தபின்பு நிர்வாக ரீதியிலான நியமனம் வழங்கப் படுமெனஇப்பயிற்சிக்குத்தெரிவாகும் போது உத்தரவாதம் வழங்கப்படவில்லை. இது பயிற்சியே தவிர நியமனமல்ல.

இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து நூறுபேர் தெரிவு செய்யப்பட உள்ளனர். அதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் அதன்மூலம் நிர்வாகரீதியான பதவிகளுக்கு அவர்கள் தெரிவாகலாம்.

எழுதுவினைஞர் சேவையில் தற்போது அனுபவமுள்ளவர்களைப் புறக்கணிக்கவும் முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (37)

இன ஒற்றுமை
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் மனதைக் குழப்புவதற்கு தூபமிட்டு வருகின்றனர்.

மக்கள் மத்தியில் பிளவினை ஏற்படுத்த உபயோகிக்கப்

யப்பானில் . . .
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னையும் மனைவியையும் பிடிப்பதற்கு ஸ்ரீலங்கா பொலிஸ் இன்ரர்போலின் உதவியை நாடியுள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் ரவுனில் உள்ள தமது வீட்டைக் கடந்த மாதம் முற்பகுதியில் காலிசெய்து கொண்டு தம்பதிகள் மொத்தப் பணத்துடன் ஓடிவிட்டதாக குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவு எஸ்.பி. தெரிவித்தார்.

யப்பானில் வேலை வாய்ப்புகள் இருப்பதாகக் கூறித் தம்பதிகள் 52பேரை ஏமாற்றி ஒவ்வொருவரிடமும் ரூபா 1,50,000முதல் ரூபா 2,00,000 வரை பெற்றுள்ளார்களாம்.

வாழைப்பாடி . . .
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாட்டிலிருந்து இளைஞர்களைக் கூட்டிச் சென்று யாழ்ப்பாணத்தில் வைத்து விடுதலைப் புலிகள் ஆயுதப் பயிற்சி அளிக்கின்றார்கள் என்றும், அவர்கள் தமிழ் நாட்டுக்குத்திரும்பிக் கொலை கொள்ளையில் ஈடுபடுவதாகவும் வாழைப்பாடி குறிப்பிட்டார்.

ஆட்சேர்ப்பில் இடம் பெறும் அநீதிகளை நீக்கி வைப்பதற்காக அந்தந்த

(கொழும்பு)

கட்டுநாயக்காவிமானநிலையத்தின் இறங்குதுறையில் மத்திய வங்கி தங்க விற்பனை நிலையம் ஒன்றை இம்மாதம் 21 ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளது.

வெளிநாட்டுப் பாஸ்போட்டுக்களை வைத்திருக்கும் விமானநிலையத்தில் தரித்துச் செல்லும் பயணிகளுக்கு ஆரம்பத்தில் தங்கம் விற்கப்படும்.

இதற்கான பணமும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படவேண்டும்.

சர்வதேச சந்தையில் உள்ள ஒருஅவுன்ஸ் தங்கத்தின் விலை 35 அமெரிக்க டொலரின்படி இது விற்கப்படும்.

ஆபரணத் தொழிலாளர்களுக்கும், ஏனைய விமானப்பயணிகளுக்கும் இதனைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்படும்.

தங்கக் கடத்தலைத் தடுக்கவும், வெளிநாட்டு நாணய மாற்றைச்சம்பாதிக்கவும் இது எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தங்க விற்பனை நிலையம்முழுமையாகச்செயற்படத் தொடங்கியதும் ஏற்றுமதிக்காக ஆபரணம்தயாரிப்போருக்குத் தங்கத்தை இறக்குமதி செய்ய விசேட வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிருமி நாசினி அருந்தி இளைஞன் தற்கொலை

(வவுனியா)

நொச்சிமோட்டை தளையசிங்கம் ரவிச்சந்திரன் (வயது 20) கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த செவ்வாய்க் கிழமை காலை கிருமிநாசினி அருந்திய இவரை வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டுவந்த சமயம் மரணமானார்.

மூன்றுமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த இரண்டுபிள்[illegible]களின் தந்தையான [illegible]ணன் இராசையா (வயது 27) என்பவரும் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

# ஓகஸ்ட் 1ஆம்திகதிக்கு இடையில் கிராமோதய சபைத் தேர்தல்

(வடமராட்சி கிழக்கு)

யாழ் மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாந்திகதிக்கிடையில் கிராமோதயசபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இத்தேர்தலை நடத்தி முடிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளமேற்கொள்ளும்படி கிராம சேவையாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்

கிராம சேவையாளர் மட்டத்தில் அப்பகுதியில் உள்ள அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட பொது ஸ்தாபனங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமோதய சபைப் பிரிவிலும் பதிவு செய்யப்பட்டுள்ள பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளே தமக்குள் சிறந்த கிராமோதய சபைத் தலைவரைத் தெரிவு செய்து கொள்ளுவார்கள். (36)

வரும் இருபத்திரண்டாம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் சகல பகுதிகளிலும் மாவட்ட அவைகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி தகவலை, வன்னிப் பிரதேச விடுதலைப் புலி

## சட்டவிரோத

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்கிறார்,

8-6-90 வெள்ளிக் கிழமை கரவெட்டி பொதுசன நூலகத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை அவர்கள் தலைமையில் பொதுஸ்தாபன உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் உப அலுவலக உத்தியோகத்தர்களுடன் சட்டவிரோத மின்பாவனையைத் தடைசெய்வதுபற்றிய கலந்துரையாடலின் போதே மேற்படி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சட்டவிரோத மின்பாவனையால் சட்டபூர்வமான மீன்பாவனையாளர்கள் பெரும் பாதிப்பு அடைவதுடன், பல அப்பாவி மக்கள் மேற்படி பாவனையால் உயிர் இழப்புகளும் நிகழ்ந்து வருகின்றன. இவற்றை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தி அனைத்து மக்களையும் காப்பாற்றுவதோடு இலங்கை மின்சார சபையின் நிலுவைப் பணத்தினையும் செலுத்தியாக வேண்டும். இதற்கு பொது மக்கள், பொதுஸ்தாபனங்கள் முன்வந்து தவறான வழிகளில் மின்சாரம் பாவிப்பவர்களை எச்சரித்தும் தடைசெய்தும், எமக்குத் தகவல்களைத் தந்தும் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இவ்வைபவத்தில் கரவெட்டி பிரதேசசபை உப அலுவலக செயலாளர் திரு. ந. ஞானவேலும் கலந்து கொண்டார். (63)

பொருளாளர், தலைவர் ஆகியோர் இணைந்து அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்ட அவைகள் அமைப்பார்கள் என்றும் வட்டஅவை உறுப்பினர்கள் இணைந்து, மாவட்ட அவைகளை அமைப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று பத்தாம் திகதி மாலை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம் பெறும்.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 ஆம் திகதி மாலை நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் மேற்படி அவைத் தெரிவு இடம் பெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 13ஆம் திகதி காலை முல்லைத்தீவு நகரப் பகுதியில் வட்ட அவை அமைக்கப்படும். அதே தினம் மாலை கொக்குளாய் பகுதிக்கான வட்ட அவைத் தெரிவும் இடம் பெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கானதும், அதே தினம் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கானதுமான வட்ட அவைத் தெரிவு அந்தந்தப் பகுதி பாடசாலைகளில் நடைபெறும்.

எதிர்வரும் இருபத்திரண்டாம் திகதி முல்லைத்தீவு, வவுனியா,கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள வட்ட அவைகளின் உறுப்பினர்கள் இணைந்து அந்தந்த மாவட்டங்களுக்கான மாவட்ட அவைகளை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைப்பார்கள்.

மேற்கண்ட தகவலைத் தெரிவித்த திரு. சந்திரன், வட்ட அவைகளும், மாவட்ட அவைகளும் குறிப்பிட்ட திகதிகளுக்கு முன்னர் அமைப்பதற்கான தீர்மானம் அண்மையில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்த அவைகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தஅவர், மக்களின் ஒத்துழைப்புடனேயே இவைஇயங்கவுள்ளன. இவை பற்றிய கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் மக்கள் முன்னணி எதிர்பார்ப்பதாகவும், நேரடியாகவே மக்கள் இது பற்றி தம்முடன் பேசிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். (தி)

## அதிகாரம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிபுணத்துவம் பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவர்.

அப்பிரதேசசபை பிரிவுகளில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தல் போன்ற அதிகாரங்கள் பிரதேச சபைக்கு வழங்கப்படுகின்றன.

மாகாண சபையின் நேரடி கண்காணிப்பின் கீழ் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

மாவட்ட ரீதியாக இதனை கண்காணிக்க குழுவொன்று அமைக்கப்படும். (37)

## அரசதுறை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களது இடங்கள் இதுவரைநிரப்பப்படவில்லை. இவ் வெற்றிடங்கள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இந்நடவடிக்கைகள் குறித்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

## ஸ்ரீலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு இராணுவ வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அனுராதபுர இராணுவ இணைப்புத் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இராணுவச்சிப்பாய்களை மதவாச்சியில் இறங்கும்படி தாம் ஒலிபெருக்கியதாக புகையிரத நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுயநல

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாது.

சுயதொழில் வேலைவாய்ப்புக்கள் மலையக இளைஞர் யுவதிகளுக்கென உருவாக்கப்படவில்லை. காணிப் பங்கீடுகளில் இடமில்லை வீடுகள் பகிர்ந்தளிப்பில் புறக்கணிப்பு பெருந்தொகையான படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லை இவற்றிற்கு நிரந்தர அரசியல் தீர்வு தேவை இவ்வாறு அவர் கூறினார்.

## ஓய்வூதியம்

( 1ஆம்பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை முழுவதும் 2 லட்சத்து 25,000 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஒவ்வொரு வருடமும் 12,000 தொடக்கம் 18,000 க்கும் இடைப்பட்டவர்கள் ஓய்வு பெறுவதால் இவ்எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா குறிப்பிட்டார்.

வாகும் போது உத்தரவாதம் வழங்கப்படவில்லை. இது பயிற்சியே தவிர நியமனமல்ல.

இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து நூறுபேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் அதன்மூலம் நிர்வாகரீதியான பதவிகளுக்கு அவர்கள் தெரிவாகலாம்.

எழுதுவினைஞர் சேவையில் தற்போது அனுபவமுள்ளவர்களைப் புறக்கணிக்கவும் முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (37)

## இன ஒற்றுமை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் மனதைக் குழப்புவதற்கு தூபமிட்டு வருகின்றனர்.

மக்கள் மத்தியில் பிளவினை ஏற்படுத்த உபயோகிக்கப்பட்ட சுலோகங்கள் தற்போது அவர்களை ஒற்றுமைப்படுத்த உதவுகிறது. நாம் ஒற்றுமைப்பட தவறினால் சமூகவிரோதிகளுக்கு இடமளித்துவிடுவோம்.

புகள் இருப்பதாகக் கூறித் தம்பதிகள் 52பேரை ஏமாற்றி ஒவ்வொருவரிடமும் ரூபா 1,50,000முதல் ரூபா 2,00,000 வரை பெற்றுள்ளார்களாம்.

## வாழைப்பாடி ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாட்டிலிருந்து இளைஞர்களைக் கூட்டிச் சென்று யாழ்ப்பாணத்தில் வைத்து விடுதலைப் புலிகள் ஆயுதப் பயிற்சி அளிக்கின்றார்கள் என்றும், அவர்கள் தமிழ் நாட்டுக்குத்திரும்பிக் கொலை கொள்ளையில் ஈடுபடுவதாகவும் வாழைப்பாடி குறிப்பிட்டார்.

ஆட்சேர்ப்பில் இடம் பெறும் அநீதிகளை நீக்கி வைப்பதற்காக அந்தந்த பகுதிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு அவ்வப்பகுதிகளைச் சேர்ந்தவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


## தவறிவிட்டது

மீசாலைக்கும் நுணாவிலுக்கும் இடையில்(உள்ளமெயின் றோட்டில்) சுப்பிரமணியதேசிகர் பாலசுப்பிரமணிய தேசிகர் அடையாள அட்டை மணிபேஸ் பணம் சில்லறைப் பொருட்கள் அடங்கிய பை ஒன்று விழுந்துவிட்டது. எடுத்தவர்கள் ஆ. சுப்பிரமணியம் ஆசிரியர் வெள்ளைமாவடிப்பிள்ளையார் கோயில், மீசாலை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் பெறவும்.

தகவல்: பா. சுப்பிரமணியதேசிகர்
இருபாலை, கோப்பாய்.

R 351


# மரண அறிவித்தல்

## இராமுப்பிள்ளை முத்துலிங்கம்

உரும்பிராய்ச் சந்தியைச் சேர்ந்த திரு. முத்துலிங்கம் 06-06-1990 (புதன்கிழமை) காலமானார். அன்னார் திருமதி மு. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (சவூதி), தயாலிங்கம், தயாநிதி, பாக்கியராஜா (கண்ணன் - சவூதி), பரமேஸ்வரன் (வரன் - ஜெர்மனி), கலாநிதி (ஜெர்மனி), ஜெயாநிதி, நீதிராஜன், இன்பராஜன் (கனகசூரியம் அன் கொம்பனி, கொழும்பு), சிவாநிதி (ஜெர்மனி), தயாகரன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராணி (முன்னாள் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை - கனடா), சகுந்தலாதேவி, மேரி ஆனந்தன் (கிறீன்லன்ஸ் பாம் உரிமையாளர்), சத்தியநாதன் (ஜெர்மனி), யசோதா (இ. தே. தோ. தொ. சங்கம்; கொழும்பு), வேயாபின் (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜித், திலக், பிரதீப், கௌரி நந்தனன், சிந்துஜா, நிரோஷ், சஜீவ், பிரவீணா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

உரும்பிராய் சந்தி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(R 348)


வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
கடிதங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

DHL WORLDWIDE EXPRESS

D. H. L. International Ltd.

C/o. Cosmos Marketing Service.
337, Kasturiyar Road, JAFFNA.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.